
# கல்வெட்டு

## *Kalvettu*

திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆடித் திங்கள்



கிரந்த எழுத்துக்கள் பொறிப்புள்ள ஆடல்வல்லான் செப்புத்திருமேனி,
அருள்மிகு காசி விசுவநாதர் ஆலயம், துறையூர்

கல்வெட்டு - காலாண்டிதழ் - 94 (ஜூலை 2013) விலை: ரூ. 10.00

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

## உள்ளே

பதிப்புரை

1. எழுத்துப்பொறிப்புடன் ஆடவல்லான் திருமேனி ... 1
கோ. முத்துசாமி

2. தமிழ்நாட்டுச் சமூக வரலாற்று ஆய்வுக்குக் கல்வெட்டியலின் தேவையும் பொருத்தப்பாடும் ... 5
சீ. இராமச்சந்திரன்

3. பத்மனாபபுரம் கோட்டை (கல்குளம் கோட்டை) ... 18
தே. கோபாலன்

4. Metallurgy As Revealed By Brihadisvara Temple Inscriptions ... 22
K. Sridaran

5. Brihadeeswarar Temple ... 26
G. Prashanth

6. நாகராசா கோயில் கல்வெட்டுகள் ... 28
மா. செந்தில் செல்வக்குமரன்

7. கஞ்சமலை சித்தேஸ்வரர் திருக்கோயில் ... 32
ச. செல்வராஜ்

8. குழந்தை வேலப்பர் திருக்கோயில் - பூம்பாறை ... 36
கோ. முத்துசாமி

கட்டுரைகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அச்சகத்தில் அச்சிட்டு இத்துறை ஆணையர் (பொறுப்பு) முனைவர் சீ. வசந்தி அவர்கள் சார்பாக திருச்சி மண்டல பதிவு அலுவலர் திரு. கோ. முத்துசாமி அவர்களால் வெளியிடப்பட்டது.

இணையதளம் : www.tnarch.gov.in
மின்னஞ்சல்: tnarch@tn.nic.in
archcommissioner@gmail.com

முனைவர் **சீ. வசந்தி,** எம்.ஏ., எம்பில்., பி.எச்டி.
ஆணையர் (பொறுப்பு)

தொல்லியல் துறை
தமிழ்வளர்ச்சி வளாகம்
ஆல்சு சாலை
சென்னை - 600 008

# பதிப்புரை

தமிழக வரலாற்றுக்குத் துணைபுரியும் முதன்மைச் சான்றுகளான கல்வெட்டுகள், அகழாய்வுத் தொல்பொருட்கள், காசுகள், செப்பேடுகள் போன்ற முதன்மைத் தரவுகளைக் கொண்டு எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியீடான "கல்வெட்டு" எனும் காலாண்டிதழில் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. இவ்விதழ் "கல்வெட்டு இதழ்-94" ஆக வெளிவருகிறது.

சுற்றுலா, பண்பாடு (ம) இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை முதன்மைச் செயலர் முனைவர் திரு. ரா. கண்ணன், இ.ஆ.ப., அவர்கள் ஆய்வுக்காக துறையூர் சென்றபோது அருள்மிகு காசி விசுவநாதர் கோயிலில் கிரந்த எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட ஆடவல்லான் செப்புத் திருமேனியைக் கண்டறிந்து அதனை மேலும் ஆய்வு செய்யுமாறு ஆணையிட்டார்கள். அதன்படி ஆய்வு செய்து ஆடல்வல்லான் செப்புத்திருமேனியின் அமைப்பு, பெருமைகள் மற்றும் கிரந்த எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ள காயத்திரி மந்திரங்களின் தகவல்கள் இவைகளுடன் கோயிலின் காலத்தையும் ஆய்வு செய்து முதல் கட்டுரையில் எழுதப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுச் சமூக வரலாற்று ஆய்வுக்குக் கல்வெட்டியலின் தேவையும் பொருத்தப்பாடும் என்ற கட்டுரையில் 13-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் கூறப்படும் தொடுசிகிச்சை முறையினையும், சிறுகுடி வேளாளர்களின் நடைமுறையினையும், திருமாலின் பத்து அவதாரங்களின் புது விளக்கத்தினையும் பல கல்வெட்டு வாசகங்களுக்கு உரிய உண்மைப்பொருளையும் கட்டுரை ஆசிரியர் திறம்பட எடுத்துக்காட்டியுள்ளார்.

பத்மனாபபுரம் கோட்டையின் பழைய பெயர் கல்குளம் என்று குறிப்பிட்டு கோட்டையின் கட்டடக்கலை, பெருமைகள் போன்றவற்றை பத்மனாபபுரம் கோட்டை என்ற கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ளது.

Metallurgy as Revealed by Brihadisvara Temple Inscriptions என்ற கட்டுரையில் அரிய செப்புத் திருமேனிகளின் வடிவமைப்பினையும் அதன் தொடர்புடைய கலைஞர்கள், கொடையாளர்கள், அரசன் அரசி பெயர்களுடன் கல்வெட்டுச் சான்றுகளுடன் நிறுவியுள்ளார்.


Brihadeeswarar Temple என்ற கட்டுரையில் இத்திருக்கோயிலின் நீள, அகலம் மற்றும் விமானம் போன்றவற்றுடன் இராஜராஜனின் பெருமையையும் குறிப்பிட்டுள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாகராசா கோயில் மிகவும் பெருமையும் புகழும் பெற்றது. அங்கு நடைபெறும் நாகர் வழிபாடு மற்றும் சிறப்பு விளக்கு பூஜைகள் போன்றவற்றை கல்வெட்டு ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டியுள்ளார்.

சேலம் மாவட்டம் கஞ்சமலை சித்தேஸ்வரர் திருக்கோயிலின் அமைவிடம், பதினெண் சித்தர்களின் பெயர்களுடன் திருக்கோயிலின் பெருமைகள், அதியமான் அவ்வையார்க்கு வழங்கியருளிய நெல்லிக்கனி மற்றும் கந்த தீர்த்தம் ஆகியவற்றைப் பற்றி சிறப்பாக விளக்கியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வட்டத்தில் பூம்பாறை சிறந்த சுற்றுலா மற்றும் மலைவாசஸ்தலமாக விளங்குகிறது. இங்குள்ள குழந்தை வேலப்பர் திருக்கோயிலை ஆய்வு செய்து வெளியிடுமாறு முதன்மைச்செயலர் முனைவர் திருமிகு ரா. கண்ணன், இ.ஆ.ப, அவர்கள் கூறியதற்கிணங்க அங்கு அமைந்துள்ள போகர் காலத்து குழந்தை வேலப்பர் திருமேனியை ஆய்வு செய்து அது நவபாஷாணத்தால் வடிவமைக்கப்பட்டது என்றும் அதனை வடிவமைத்த போகரின் சிறப்புக்களையும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு சிறந்த கட்டுரைகளை உள்ளடக்கிய இவ்விதழினை சிறப்புறப் பதிப்பித்துள்ள இத்துறை மண்டல பதிவு அலுவலர் திரு. கோ. முத்துசாமி அவர்களுக்கு மனமுவந்த பாராட்டுகள். கருத்துச்செறிவு மிக்க இவ்விதழ் சிறந்த ஆய்விதழாக அமைந்துள்ளது. இக்கல்வெட்டுக் காலாண்டிதழ் பாங்குற வெளிவருவதில் பெரும் பங்காற்றிய அச்சுப்பிரிவினர் அனைவருக்கும் மனமார்ந்த நன்றி. வழக்கம்போல் வரலாற்று ஆர்வலர்கள், தொல்லியல் ஆர்வலர்கள் இவ்விதழை வரவேற்பார்கள் என நம்புகிறேன்.



# எழுத்துப்பொறிப்புடன் ஆடவல்லான் திருமேனி

1

**கோ. முத்துசாமி**

மண்டல பதிவு அலுவலர், திருச்சி

சுற்றுலா, தொல்லியல் துறை, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை முதன்மைச் செயலர் முனைவர் திரு. ரா. கண்ணன், இ.ஆ.ப., அவர்களின் ஆணையின்படி திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூர் அருள்மிகு காசி விசுவநாதர் ஆலயத்தில் உள்ள ஆடவல்லான் செப்புத் திருமேனியை ஆய்வு செய்து கட்டுரையாக கீழே அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வினை மேற்கொள்ள அனுமதி வழங்கிய முதன்மைச் செயலர் அவர்கட்கும், தொல்லியல் ஆணையர் (பொ) அவர்கட்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**துறையூர் - பெயர்க் காரணம்**

இவ்வூர் பெரிய ஏரியின் தண்ணீர்த் துறையின் கரையில் அமைந்துள்ளதால் துறையூர் என்று தொன்றுதொட்டு வழங்கப்பட்டு வருகிறது.

**திருப்பெருந்துறை**

இவ்வூர் போலவே புதுக்கோட்டை மாவட்டத்தில் திருப்பெருந்துறை எனும் பேரூர் உள்ளது. அங்குதான் உலகப்புகழ் பெற்ற ஆவுடையார் கோயில் அமைந்துள்ளது. இங்கு பெருந்துறை என்பது துறைமுகத்தைக் குறிக்கிறது. பல்லவ மன்னர்கள் காலத்தில் அரேபியாவிலிருந்து இத்துறைமுகத்தின் வாயிலாக குதிரைகள் வந்திறங்கின எனபதும் தெரிகிறது.

**துறையூர் கோயில்–பெருந்துறை கோயில்**

துறையூரில் அமைந்துள்ள அருள்மிகு நந்திகேஸ்வரர் திருக்கோயிலுக்கு முன்னோடியானது திருப்பெருந்துறையில் அமைந்துள்ள அருள்மிகு ஆவுடையார் கோயில் ஆகும்.

ஆவுடையார் கோயிலில் முன்மண்டபமும் பெரிய அளவில் தூண் சிற்பங்களும் உள்ளன. உள்மண்டபங்களில் தூண்களின் அடிப்பாகத்தில் அமைந்துள்ள புடைப்புச் சிற்பங்களும் பேரழகு வாய்ந்தவை.

அதுபோலவே துறையூர் ஸ்ரீநந்திகேஸ்வரர் கோயிலிலும் தூண் சிற்பங்கள் சற்று சிறிய அளவில் காணப்படுகின்றன. மண்டபங்களில் உள்ள தூண்களில் சிவபெருமான் திருவிளையாடல் காட்சிகளும், கிருஷ்ணனது கோகுலக் காட்சிகளும் எழிலுடன் வடிக்கப்பட்டுள்ளன.

ஆவுடையார் கோயிலில் அருள்மிகு நந்திபெருமானுக்கு தனிச்சன்னதி உள்ளது. துறையூரில் மூலவர் பெருமானுக்கே அருள்மிகு நந்திகேஸ்வரர் எனும் திருநாமம் விளங்குகிறது.

**நந்திபுரம்**

துறையூருக்கு மிக அருகில் நந்திபுரம் எனும் ஊர் உள்ளது. எனவே அருள்மிகு நந்திபெருமானின் புகழ் வெளிப்பாடு தெரியவருகிறது. இக்கோயிலில் மேடையில் இரண்டு நந்திகள் காட்சி தருகின்றன.

**துறையூர் இறைவன் நாமம்**

இக்கோயிலில் அருள் தரும் சிவபெருமானுக்கு தீர்த்தபுரீஸ்வரர் எனும் தலப்பெயரும் நிலவுகிறது. ஊருக்கு தீர்த்தபுரி என்ற மற்றொரு பெயரும் உண்டு.

அருகில் உள்ள பேரேரியில் பெருமான் பெருந்திருவிழாவில் தீர்த்தவாரி நிகழ்வும், தெப்பத் திருவிழாவும் நடைபெறுவதுண்டு. திருவாரூரில் உள்ளதுபோல் இங்குள்ள பெரிய ஏரியின் நடுவில் நீராழி மண்டபமும் கட்டப்பட்டுள்ளது. எனவே துறையூர் எனும் பெயர் இதனால் மேலும் தெளிவாகிறது எனலாம்.

**இறைவி திருநாமம்**

துறையூரில் எழுந்தருள்பாலித்து வரும் தேவியின் திருநாமம் அருள்மிகு மகா சம்பத்கௌரி என்பதாகும். அதாவது பக்தர்களுக்கு உயர்ந்த வெற்றியை இன்முகத்துடன் அருளும் நாயகி என்னும் பொருளில் அம்மையின் திருநாமம் உள்ளது.

**புனித நீர்**

கோயிலில் அமைந்துள்ள கிணற்றில் அக்னி தீர்த்தம் எனும் புனித நீர்ப்பெயர் வழங்கி வருகிறது.

**தலவிருட்சம்**

இக்கோயிலின் முன் மண்டபத்திற்கு எதிரே இத்தலத்தருவாக உள்ள மகிழ மரம் நன்கு வளர்ந்து பசுமையுடன் காட்சி தருகிறது.

**கோயிலின் காலம்**

இக்கோயிலின் மூலவர் சன்னதி கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டாகக் கருதப்படுகிறது. அம்மன் சன்னதி மற்றும் கோட்ட தேவதைகள் 12-13-ஆம் நூற்றாண்டாகக் கருதலாம். மண்டபங்கள், இதர தூண் சிற்பங்களின் காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டாகக் கருதமுடிகிறது.

**ஆடல்வல்லான் செப்புத் திருமேனி ஆய்வு**

இக்கோயிலின் பாதுகாப்பு அறையில் ஆடல்வல்லபெருமான் (ஸ்ரீநடராஜர்) செப்புத்திருமேனி வைக்கப்பட்டுள்ளது. இத்திருமேனி இக்கோயிலின் உபகோயிலாக உள்ள அருள்மிகு காசி விசுவநாதர் கோயிலுக்குச் சொந்தமானது. இக்கோயில் நந்திகேஸ்வரர் கோயிலிலிருந்து சுமார் 3 பர்லாங் தூரத்தில் அமைந்துள்ளது.

**திருமேனி அமைப்பு**

நடராஜர் திருமேனி 1) தாமரை பீடம் 2) ஆடல்பெருமான் 3) சுவாலையுடன் கூடிய திருவாட்சி என்ற மூன்றும் சேர்ந்து ஒரே கட்டமைப்புடன் வடிக்கப்பட்டுள்ளது. தலையில் இருபுறமும் விரிசடைகளும், மேலே கங்கையும், பின்புறம் கொக்கு இறகுகளும் அதன்கீழ் சிரசுச் சக்கரமும் விரிசடையின் வலது பக்கம் சூரியனும் இடது பக்கம் சந்திரனும் அணிந்துள்ளார். தனது வலது காலின் கீழ் முயலகனை மிதித்துள்ளார். தாமரை பீடத்துடன் சேர்ந்துள்ள திருவாட்சியில் 24 தீச்சுடர்கள் அலங்கரிக்கின்றன. இறைவனின் வலது முன்கை அபயம், பின்கை உடுக்கையும், இடது முன் கை நடனமிடும் நிலையும், பின்கை தீச்சுடர் ஏந்தியும் கலைநயத்துடன் காட்சி தருகிறது.

**திருமேனியில் தொல்லெழுத்துக்கள் பொறிப்பு**

ஆடல்வல்ல பெருமானின் செப்புத்திருமேனியில் (பஞ்சலோக சிலை), கால் பகுதியும் தாமரை அடிபீடமும் ஒட்டி சேர்ந்துள்ள பகுதி பழுதுற்று ஆட்டம் (ஜடிபந்தனம்) கண்டுள்ளது. இது சீர் செய்யப்படவுள்ளது.

இத்திருமேனியின் அடி தாமரை பீடத்தின் நான்கு பக்கமும் கிரந்த எழுத்துக்கள் சற்று பெரிய வடிவில் வெட்டப்பட்டுள்ளன. இதில் கிரந்த அட்சரங்கள் முழுவதும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலும் பீடத்தில் 1) மிருத்யுஞ்சய மந்திரம் 2) காயத்ரி மந்திரம் பொறிக்கப்பட்டுள்ளன. தாமரைப் பீடத்தில் 2 வரி முதல் 5 வரி வரை பெரிதும் சிறிதுமாக இடைவெளி ஒரு சில தமிழ் எழுத்துக்களுடன் (மணிப்பிரவாள) நடையில் பொறிக்கப்பட்டுள்ளன.

பீடத்தின் நான்கு மூலைப்பகுதிகளிலும் எந்திரக் கட்டங்கள் அம்புக்குறிகளுடன் உள்ளன. இரண்டில் திருஅம்பலச்சக்கரம் எழுதப்பட்டுள்ளது. மற்ற இரண்டும் எழுத்தின்றி கட்டங்கள் மட்டுமே தெரிகிறது.

தாமரைப் பீடத்தில் 1) திரிபுராந்தக 2) மகேஸா 3) தஸ்யக என்ற சிவபெருமானைப் புகழும் சொற்கள் கிரந்த எழுத்தில் மந்திரங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**திருவாச்சியின் பின்புறமுள்ள பொறிப்புகள்**

ஆடவல்ல பெருமான் செப்புத்திருமேனியை அலங்கரிக்கும் ஒட்டிய திருவாட்சியின் பின்புறத்தில் வளைவில் மூன்று வரிகளில் தொடர்ந்து கிரந்த அட்சரத்தில் சிவகாயத்ரி மந்திரம் வெட்டப்பட்டுள்ளது. இங்கு இடது கால் பகுதியில் மந்திரம் தொடங்குகிறது. வலது பக்கம் அடிப்பகுதியில் சென்று நிறைவடைகிறது.

இந்தப்பகுதியில் மும்மூர்த்திகளில் முதல்வனாகிய சிவபெருமானின் புகழ் பாடப்பட்டுள்ளன. மேலும் இப்பகுதியில் 1) சதயம் 2) ரேவதி 3) உத்திரட்டாதி 4) பூரட்டாதி 5) பரணி போன்ற நட்சத்திரங்களின் பெயர்களும், சில மாதங்களின் பெயர்களும் வருகின்றன. ஓம்ஹரிஹரசிவ என்றும் வருகிறது. மந்திரங்கள் முடியும் இடம் பிரஜாதயாத் என்ற சொல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆடல்வல்லான் செப்புத் திருமேனியின் காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டாகும். கிரந்த மந்திரங்களின் எழுத்தமைதி காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டாகும்.

தமிழகத் திருக்கோயில்களுக்கு ஆடல்வல்லானாகிய நடராஜப் பெருமானின் செப்புத்திருமேனியை செய்து அளித்ததாகப் பல கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

தஞ்சாவூர், திருவெண்காடு, குடவாசல் போன்ற திருக்கோயில்களில் உள்ள ஆடவல்லான் செப்புத்திருமேனிகளில் தொல்லெழுத்துப் பொறிப்புகள் காணப்படுகின்றன. மேலே குறிப்பிடப்பட்ட துறையூர் திருக்கோயில் ஆடவல்லான் திருமேனியில் சிவனின் பெயர்கள், நட்சத்திரங்கள், வழிபாட்டு மந்திரங்கள் போன்றவை பொறிக்கப்பட்டு காணப்படுவது தமிழகத் திருக்கோயில்களின் கலை வரலாற்றில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்று விளங்குகிறது.

# தமிழ்நாட்டுச் சமூக வரலாற்று ஆய்வுக்குக் கல்வெட்டியலின் தேவையும் பொருத்தப்பாடும்

2

*சீ. இராமச்சந்திரன்*
கல்வெட்டாய்வாளர் (ப.நி.)

கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் சில கல்வெட்டுகளில் அங்கவைஜ்யர் என்ற தொடர் இடம்பெற்றுள்ளது. இதனை அங்கவைஸ்யர் என்பதன் தவறான வடிவமாகக் கருதி வைசிய வர்ணத்தைச் சேர்ந்த, அதாவது வணிகர் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் என்று சில கல்வெட்டு ஆய்வாளர்கள் பொருள் கூறியுள்ளனர். அங்கவைஜ்யர் என்பது அங்கவைத்யர் என்பதன் திரிபாகும். வைத்தியம் என்பது வைச்சியம் என்றும் எழுதப்படுவதுண்டு. வங்காள மொழியில்கூட வைத்யநாதர் என்பது பைஜ்நாத் என்றே எழுதப்படும். இன்றைய *சீன* நாட்டு *சிகிச்சை* முறையாகக் கருதப்படும் அக்யுப்ரஷர் முறையே அங்கவைத்யம் என முற்காலத்தில் வழங்கிற்று. உண்மையில் இதன் தொடக்கம் மருத்துவச் சிகிச்சை முறையாக அமையவில்லை. அங்கவித்யா என்பது ஒருவித போர்க்கலை மரபாகும். கராத்தே, அக்யுப்ரஷர் இரண்டும் இணைந்த போர்க்கலை மரபு என இதற்கு விளக்கம் கூறலாம். கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதப்பட்ட வேம்பத்தூரார் திருவிளையாடல் புராணத்தில் அங்கம் வெட்டிய படலத்தில் ***அங்க நூற்றெட்டும் வென்றான்*** என்ற வரி இடம்பெற்றுள்ளது. 108 அங்கவெட்டு என்றும் இதனைக் குறிப்பிடுவதுண்டு. மனித உடலில் 108 வர்மஸ்தானங்கள் இருப்பதாகவும் அவற்றைப் படுவர்மம் 12, தொடுவர்மம் 96 என இரண்டு வகையாகப் பிரித்துப்பார்ப்பதுண்டு என்றும் கூறுவது வழக்கம்.

அதாவது தற்செயலாகப்படுவதன் மூலமே மனித உடலுக்கு ஊறு விளைவிக்கக்கூடிய வர்மஸ்தானங்கள் 12. சற்று அழுத்தமாகத் தொடுவதன் மூலம் ஊறு விளைவிக்கக்கூடிய வர்மஸ்தானங்கள் 96. அகங்கை அல்லது அங்கை என்றால் விரிந்த உள்ளங்கை என்பது நேர்ப்பொருள் ஆகும். ஆயுதம் ஏந்தாத வெறும் கை என்று இதற்கு விரித்துப் பொருள் உரைக்கலாம்.

இத்தகைய வெறும் கையால் அல்லது கை விரல்களால் 108 வர்மஸ்தானங்களைத் தாக்கி எதிரியை வெட்டி வீழ்த்துவதே அங்கவெட்டு ஆகும். இது காலப்போக்கில் அங்கம் வெட்டுதல் என்று திரிந்தது.

பண்டைச் சேர நாடாகிய கேரள மாநிலத்தில் ஆரோமலுண்ணி என்ற ஈழவர் கல வீரர் அங்கவெட்டுக் கலையில் கைதேர்ந்தவராக இருந்தவர். கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படுகிற ஆரோமலுண்ணி அல்லது ஆரோமல் சேவகர் பற்றிய நாட்டுப் பாடல்கள் மலையாள மொழியில் இன்றும் வழங்கி வருகின்றன. ***ஆடாம் பாடாம் ஆரோமல் சேவகர் பண்டு அங்கம் வெட்டிய கதகள் வீரக் கதகள் தீரக் கதகள் அல்புத கதகள் பாடாம்*** என்று ஒரு திரைப்படப் பாடலே சற்றொப்ப 40 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது.

அங்கம் என்பது இலங்கை நாட்டிலும் முற்காலத்தில் பிரபலமாக இருந்தது. ***அங்கமன உனம்பவ, கெஹுள் பண்ணா*** என்ற பெயருடைய சிங்கள பௌத்தக் குடும்பங்கள் அங்கக் கலையில் தேர்ச்சிப பெற்றவையாக இருந்தன. அங்கம் என்பது ஒரு நீதி வழங்குகின்ற நடைமுறையாகவும் இருந்துள்ளது. அதாவது போர் வீரர் மரபினைச் சேர்ந்த இருவரிடையே ஒரு சொத்துக் குறித்த தகராறு ஏற்பட்டால் அங்கப்போர் முறையில் இருவரும் போரிட வேண்டும் யார் வெற்றி பெற்றவரோ அவருக்கே அச்சொத்து உரியது. இத்தகைய பழங்குடி நீதிமுறை என்பது சேர நாட்டிலும் இலங்கையிலும் மட்டுமின்றிச் சோழ நாட்டிலும் இருந்துள்ளது என்பதற்குப் பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ள ஈழகுலச் சான்றார் ஏனாதி நாதர் புராணமே எடுத்துக்காட்டாகும். கும்பகோணம் பகுதியிலுள்ள, தற்போது ஏனநல்லூர் என வழங்கப்படுகிற எயினனூரில் வாழ்ந்தவர் ஏனாதி நாதர் ஆவார். அவர் அரசர்களுக்குப் போர்க்கலைப் பயிற்சி கற்பிக்கின்ற ஆசான் மரபினர் ஆவார். அவருடைய குலப் பிரிவினைச் சேர்ந்த அதிசூரன் என்பவன் அவர்மேல் பொறாமை கொண்டு ஆசான் பதவிக்காக அவருடன் போரிடுவதுதான் ஏனாதி நாதர் புராணத்தின் கரு ஆகும்.

அங்கப்போர் முறை என்பது அங்கக்களரி என்றும் தமிழ்க்கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறது. அங்கக்கலையில் தேர்ச்சிப் பெற்றவன் என்று பொருள்படுகிற ***உலகன் அங்கக்காரன், பாவன் அங்கக்காரன்*** போன்ற பெயர்களைச் சூட்டிக்கொண்ட தலைவர்களும் இருந்துள்ளனர். ***உலகன் அங்ககார நல்லூர்*** என்ற ஊர்ப்பெயர் மூன்றாம் இராஜராஜ சோழனின் திருப்பைஞ்ஞீலிக் கல்வெட்டில் இடம்பெறுகிறது.[1] பாவன் அங்கக்காரன் வாய்க்கால் என்ற வாய்க்கால் நெல்லை மாவட்டம் கடயநல்லூரிலுள்ள சிவன்

கோயிலின் அம்மன் சன்னிதியில் பொறிக்கப்பட்டுள்ள சடையவர்மன் குலசேகர பாண்டியனின் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது.[2] பாவன் என்பது பாவா என்ற தெலுங்குச் சொல்லுடன் தொடர்புடையதாகத் தோன்றுகிறது. உலகன் என்பது மலையாளத்தில் லோகன் என்று வழங்கும். களரிப் பயிற்சி கற்றுக்கொள்ளும் மாணவன் லோகன் எனப்படுவான். ***அங்கக்காரனும் ஆவணக்காரனம் உலகனும்*** என்ற கல்வெட்டு வாசகமும் குறிப்பிடத்தக்கது.[3] மாமன் அங்கக்காரன், அண்ணன் அங்கக்காரன், ஐயன் அங்கக்காரன் போன்ற பட்டப்பெயர்கள் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் இடம்பெறுகின்றன.

வர்மம் என்ற சொல் வன்மம் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாகும். ஆழ்மனப் பகையுணர்வை வன்மம் என்று குறிப்பிடுவது வழக்கம். இது வல் என்ற வேர்ச்சொல்லில் இருந்து தோன்றியதாகும். வலிமை, வன்மை, வல்லமை என்ற சொற்களுக்கு இதனுடன் உறவுண்டு. நரம்பு மையங்களை ஆழமாகத் தாக்கி உடல் உறுப்பகளுக்கோ உயிருக்கோ ஊறு விளைவிப்பது வன்மம் அல்லது வன்ம அடி எனப்பட்டது. கம்பராமாயணம் யுத்த காண்டத்தில் அதிகாயன் வதைப்படலத்தில் (பா.227) வன்மம் என்ற சொல் இடம்பெற்றுள்ளது. நீலன் என்ற வானர வீரன் உன்மத்தன் என்கிற அரக்கர்குல வீரனை ஒரே ஒரு வன்ம அடியால் வீழ்த்தி உயிரிழக்கச் செய்கிறான்.

***உன்மத்தன் வயிர மார்பின் உரும் ஒத்த கரம் சென்றுற்ற***
***வன்மத்தைக் கண்டும் மாண்ட மதமத்த மலையைப் பார்த்தும்***
***சன்மத்தின் தன்மையானும் தருமத்தைத் தள்ளி வாழ்ந்த***
***கன்மத்தின் கடைக் கூட்டானும் வயமத்தன் கழதின் வந்தான்***

இப்பாடலின் பொருள் பின்வருமாறு:

'*உன்மத்தனின் வஜ்ஜிரம் போன்ற மார்பில் நீலனின் கையால் இடிபோன்ற வன்ம அடி விழுவதையும் அதனால் மதம் பிடித்த யானை விழுவதைப் போல உன்மத்தன் உயிரிழந்து சாய்வதையும் பார்த்த பின்னரும் அரக்கப் பிறவியின் தன்மைக்கேற்பவும் அறவுணர்வுக்குத் தொடர்பற்ற வாழ்க்கையின் கர்மவினைக்குப் பலன் கிடைக்கக்கூடிய நேரம் வந்துவிட்டது என்பதாலும் (சாவதற்காகவே) வயமத்தன் வேகமாகச் சண்டையிடுவதற்கு வந்தான்*' என்பது இதன் பொருள்.

இதேபோன்று அங்கம் என்ற சொல் போர் என்ற பொருளில் யுத்த காண்டத்தில் கும்பகருணன் வதைப்படலத்தில் (பா. 15) பயன்படுத்தப்பட்டுள்ளது. ***சங்கம் வந்துற்ற கொற்றத் தாபதர் தம்மோடு எம்மோடு அங்கம் வந்துற்றது*** என்பது பாடல் வரியாகும். கொற்றத் தாபதர் என்பது முனிவரையொத்த தோற்றத்தில் இருந்த இராம இலக்குவர்களைக் குறிக்கும் அவர்களுடன் அரக்கர்களாகிய நாங்கள் போரிட நேர்ந்துள்ளது என்பது இதன்பொருள்.

யுத்தகாண்டம் மகுட பங்கப் படலத்தில் (பா. 32-48) ஒரு காட்சி இடம் பெற்றுள்ளது. போர் தொடங்குவதற்கு முன்னர் அணிவகுப்பு மேற்பார்வை நடைபெற்றுக் கொண்டிருக்கையிலேயே யாரும் எதிர்பார்க்காத வகையில் சுக்ரீவன் இராவணன் மீது பாய்ந்து விடுகிறான். இராவணனுக்கும் சுக்ரீவனுக்கும் கடுமையான மோதல் ஏற்படுகிறது. இராவணன் தன் இருபது கைகளால் சுக்ரீவனைக் கடுமையாகத் தாக்குகிறான். அத்தாக்குதலை எவ்வாறோ எதிர்கொண்டு இராவணனைத் திருப்பித் தாக்கிய சுக்ரீவன். திடீரென இராவணனின் மகுடங்களில் இருந்த மணிகளைப் பிடுங்கிக்கொண்டு திரும்பி வந்துவிடுகிறான். இராவணன் தன் மகுடத்திற்குப் பங்கம் ஏற்பட்டதை எண்ணி வேதனையுடன் இதைவிட இறந்துபோயிருக்கலாமே என்று மனதுக்குள் புலம்புகிறான். மகுட மணிகளை இராமனின் கால்களில் வைத்த சுக்ரீவன் இராவணனின் பத்துத் தலைகளையும் கொண்டுவர இயலாமல் வெறுங்கையுடன் வந்திருக்கிறேன் என்கிறான். அதற்கு விபீடணன், ***தசமுகன் முடியில் தைத்த திருமணி பறித்துத் தந்த வென்றியே சீரதன்றோ?*** என்று வினவுகிறான். சுக்ரீவனை ஆறுதல்படுத்தும் வகையில் இன்றிது வென்றி என்று இராமனும் கூறுகிறான். சுக்ரீவன் வெற்றி பெறாமல் வெறுங்கையுடன் வந்திருக்கிறேன் என்று வருத்தத்துடன் கூறியதற்கு மறுமொழியாக மகுட மணியைப் பறித்ததே பெரிய வெற்றிதான் என்று விபீடணனும், இராமனும் கூறியதை அடிப்படையாகக் கொண்டே வெறுங்கையால் வெல்லுதால் என்ற சொற்றொடராட்சி உருவாகியிருக்க வேண்டும். இது அங்கப்போர் மரபினை நினைவூட்டும் வகையிலும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. கி.பி 13-ஆம் நூற்றாண்டின் சில கல்வெட்டுகளில் வெறுங்கையால் வென்ற நாடாள்வான் என்ற பட்டப்பெயர் கொண்ட அதிகாரிகள் இடம் பெற்றுள்ளனர்.

அக்கல்வெட்டு அல்லது அங்கக்களரியைப் பொறுத்தவரை, ஈழவர், ஈழச்சான்றார் என்ற இரு பிரிவினரே ஆசான் மரபினராக அறியப்படுகின்னர். இவர்களுள் ஈழவர் சாதியினர். வீரன் என்று பொருள்படும் சேவகன் என்ற

பட்டத்தினை சாதிப்பட்டமாகத் தரித்து வந்தனர். இன்றும் கேரள மாநிலத்தில் (சேவகன்மார் என்ற சொல்லின் மலையாள உச்சரிப்பான்) சோவன்மார் என்ற பெயரால்தான் ஈழவர் அறியப்படுகின்றனர். ஈழச்சான்றார் பிரிவினர் சான்றோர் குலம் எனப்படுகிற தமிழக அரசகுலத்தின் ஒரு பிரிவினராக மாறிவிட்டனர். சான்றோர் குலத்துக்குத் தற்போது சாணார் குலம் என்ற பெயர் வழங்கி வருகிறது. இவர்கள் அரசன் என்று பொருள்படுகின்ற பெருமாள் என்ற பட்டத்தையும் நாடாள்வார் என்ற பட்டத்தையும் தம்முடைய சாதிப்பட்டமாகத் தரித்து வருகின்றனர். இப்பட்டங்களுள் நாடாள்வார் என்ற பட்டம்தான் நாடார் என்ற வடிவில் தற்போது வழக்கில் உள்ளது. தமிழகத்தில் வாழும் ஈழவர் சாதியினர் பஞ்ச நாட்டார், செஞ்ச நாட்டார், ஆரணத்தார், மருமூட்டல்லம், சோழியர் என்ற ஐந்து பிரிவுகள் கொண்ட சிறுகுடி வேளாளர்கள் எனத் தம்மை அழைத்துக்கொள்கின்றனர். கோயம்புத்தூரை அடுத்துள்ள பேரூரில் சிறுகுடி வேளாளர் மடம் ஒன்று இருந்தது. அம்மடத்தில் இருந்த கி.பி. 17-ஆம் நூற்றாண்டுக்குரிய செப்பேட்டின் வாசகங்கள் கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்கள் என்ற நூலில் புலவர் செ. இராசு அவர்களால் வெளியிடப்பட்டுள்ளன. ***செட்டி தோளேறும் சேவகர்*** என்பது அத்தகைய வரலாற்றுப் பெருமித உணர்வு குறித்த ஈழவர்களின் பட்டமாகும். சான்றார் குலத்தவர்க்குரிய, திருமுருகன் பூண்டி கருமாபுரம் செப்பேடுகளின் வாசகங்கள் மேற்குறித்த நூலிலேயே புலவர் செ. இராசு அவர்களால் வெளியிடப்பட்டுள்ளன. ***செட்டி தோளேறும் பெருமாள்*** என்பது சான்றோர் சாதியினரின் பெருமிதப் பட்டங்களுள் ஒன்றாக அச்செப்பேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஈழவர் சாதியினரும், சான்றோர் சாதியின் உட்பிரிவாகிய ஈழச்சான்றோர் குலப்பிரிவினரும் அரசர்களுக்கு அங்கப்போர்க் கலையைப் பயிற்றுவித்தவர் களாகத் தம்மைக் குறிப்பிட்டுக்கொள்வது வழக்கம். ஈரோடு மாவட்டம் அவல்பூந்துறை மடத்துச் செப்பேட்டு வாசகங்கள் ***வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும்*** என்ற நூலில் என்னால் வெளியிடப் பட்டுள்ளன. அச்செப்பேட்டில், ***திங்கள் முடி செவ்வந்தி நாதர் திருச்சிராய்ப்பள்ளி மலைதனில் சேரன் முன்பும் சோழன் முன்பும் பாண்டியன் முன்பும் அங்கமழுவானது (பயிற்றி)*** என்று சான்றோர் சாதியினர் குறிப்பிட்டுக் கொள்கின்றனர். கோவை மாவட்டம் பேரூர் சிறுகுடி வேளாளர் மடத்துச் செப்பேட்டில் இதேபோல் ஈழவர் சமூகத்தவரும் குறிப்பிட்டுக் கொள்கின்றனர்.

திருமாலின் 10 அவதாரங்களுள் நரசிம்ம அவதாரம் வெறும் கையால் இரணியனைக் கொன்ற பெருமையை உடைய அவதாரம் ஆகும். வெறும் கையால் எதிரிகளைக் கொல்கின்ற ஆற்றல் படைத்த அங்கப்போர் மரபினர் நரசிங்க வீரர் என்றும் தம்மைக் குறிப்பிட்டுக்கொண்டனர். கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் திருச்செந்தூருக்கு அருகிலுள்ள அங்கமங்கலம் என்ற ஊரில் அங்கப்போர் வீரர்கள் பாண்டிய மன்னனால் குடியேற்றப்பட்டனர். அவ்வூர் அங்கை மங்கலமான வீரபாண்டியன் மடிகை மாநகரம் என்று வழங்கப்பட்டது. மடிகை என்பது மளிகை என்ற பொருள்படும். அதாவது, மளிகைப் பொருள்களின் சேமிப்புக் கிடங்குகளோடு கூடிய ஊர் என்பதே மடிகை மாநகரம் என்பதன் பொருளாகும். இவ்வூரிலிருந்த சிவன் கோயில் *நரசிங்க ஈஸ்வரர் கோயில்* எனக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. நரசிங்கவீரர் என அழைக்கப்பட்ட அங்கப்போர் வீரர்களால் வழிபடப்பட்ட சிவன் என்பதால்தான் அவர் நரசிங்க ஈஸ்வரர் என்ற பெயரைப் பெற்றிருந்தார்.[4]

இன்றைய தமிழ்நாட்டின் தென்கோடியில் உள்ள கன்னியாகுமரி மாவட்டத்தை உள்ளடக்கிய கேரள மாநிலத்தின் தென்பகுதி வேணாடு என்றும் திருவிதாங்கோடு சமஸ்தானம் என்றும் வழங்கப்பட்டது. கி.பி. 1729-ஆம் ஆண்டில் திருவிதாங்கோடு சமஸ்தானத்தின் ஆட்சிக்கு வந்த அனுஷம் திருநாள் மார்த்தாண்ட வர்மா, அனந்த பத்மநாபன் நாடார் என்பவரைத் தம்முடைய வலக்கரமாகவும் களரி ஆசானாகவும் வைத்திருந்தார். அனந்த பத்மநாபன் நாடார் திருவட்டாறு என்ற ஊரிலிருந்த நரசிங்க மடத்தின் தலைவராகவும் 108 களரிகளின் ஆசானாகவும் இருந்தார் எனத் திருவிதாங்கோடு சமஸ்தானத்தில் வழங்குகிற மக்கள் வாய்மொழி வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அனந்த பத்மநாபன் நாடார் குடும்பத்தார் வசம் 1748-ஆம் ஆண்டில் அனுஷம் திருநாள் மார்த்தாண்ட வர்மாவால் வழங்கப்பட்ட செப்பேடு ஒன்றுள்ளது. அச்செப்பேட்டில் அனந்த பத்மநாபனைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் சில இடம்பெற்றுள்ளன.

ஈழவர் சாதி பற்றியும், சான்றோர் சாதியின் ஈழச் சான்றோர் குலப் பிரிவு பற்றியும் நாம் விவாதித்த செய்திகளின் அடிப்படையில் தமிழகப் போர்க்கலை மரபு பற்றியும், சேர சோழ பாண்டியர்களின் போர்ப்பயிற்சி முறைகள் பற்றியும் சில ஆய்வுக் கருத்துகளை மேற்கொள்ள முடியும். கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியைச் சேர்ந்த கும்பகோணத்திற்கு அருகிலுள்ள திரைலோக்கியில்

பொறிக்கப்பட்டுள்ள இரண்டாம் இராஜராஜனின் கல்வெட்டில் ***ராஜகுலவர் காணிப்பற்று ஜீவிதம் பரிக்கிரகம்*** என்ற குறிப்பு காணப்படுகிறது. சோழ அரச குலத்தவரின் நுகர்வுக்குரிய நிலங்கள் மற்றும் போர்ப்பயிற்சி அவை (Defence Academy) ஆகியவையே இவ்வாறு குறிப்பிடப்படுகின்றன. போர்ப்பயிற்சி அவையில் பட்டத்து அரசனாக முடிசூட இருக்கின்ற இளவரசன் முதல் மூலப்படை எனப்படுகின்ற அரசகுலப் படைப்பிரிவு உட்பட முதன்மையான போர் வீரர்களுக்கு அனைத்துவிதப் போர்ப்பயிற்சிகளும் வழங்கப்பட்டன என்று நாம் முடிவு செய்வதில் தவறில்லை. எனவே, பரிக்கிரகங்களின் தலைமைப் பயிற்சியாளராக இருந்தவர் பல்வேறு விதமான போர் முறைகளிலும் குதிரை ஏற்றம், யானை ஏற்றம் போன்றவற்றிலும் எத்தகைய பயிற்சியும் அனுபவமும் மிகுந்தவராக இருந்திருப்பார் என்பதையும், அத்தகைய பயிற்றுனர்கள் இறையிலி மானிய நிலங்கள் முதலான அனைத்துவித அதிகாரங்களும் செல்வாக்கும் உள்ளவர்களாக இருந்திருப்பார்கள் என்பதையும் நாம் ஊகித்துப் புரிந்து கொள்ளலாம். மேற்குறித்த திரைலோக்கிக் கல்வெட்டில் பரிக்கிரகம் என்பதை அடுத்து மாண் ஊர்கள், (அரசகுலத்தவர்) உடுத்தும் கூறை உள்ளிட்டு நெய்யும் நகரங்கள் என்ற குறிப்பும் காணப்படுகிறது. மாண் ஊர்கள் என்பது போர்ப்பயிற்சி பெறும் மாணவர்களின் குடியிருப்புப் பகுதிகளைக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். அரசகுலத்தவர் உடுத்தும் வறை (உடை) முதலானவற்றை நெய்கின்ற நெசவாளர்கள் அவ்வூரை அடுத்துள்ள துகிலி என்ற ஊரில் வாழ்ந்திருக்க வேண்டும். துகில் என்ற பெயரே ஆடை என்ற பொருளுடையதாகும். மட்டுமின்றி, இன்றுவரை அவ்வூரில் நடைமுறையிலுள்ள துகில் நெசவு என்பது அச்சுற்று வட்டாரத்தில் மிகவும் புகழ்பெற்ற ஒன்றாக உள்ளது.

பரிக்கிரகம் என்ற சொல் தமிழில் பெரும்பற்று என்றும் வழங்கிற்று. பரி என்றால் பெரிய என்றும் கிரகித்தல் என்றால் பற்றுதல் என்றும் பொருளாகும். மூலப்படை என்றும், வலங்கை மகாசேனை என்றும் வழங்கப்பட்ட சோழ அரசகுலப் படையால் பற்றிக்கொள்ளப்பட்ட விளைநிலத்துடன் கூடிய போர்ப்பயிற்சிக் களமே பரிக்கிரகம் ஆகும். சோழ அரசர்கள் முடிசூடிய தலமான தில்லை (சிதம்பரம்) பெரும்பற்றப் புலியூர் என்றும் வழங்கப்பட்டது. இது பரிக்கிரகம் அல்லது பெரும்பற்று அமைந்த ஊராகவே இருந்தது என்பதில் ஐயமில்லை.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் சோழ அரசின் வீழ்ச்சி முழுமையடைந்தது. அப்போது, பாண்டிய நாட்டில் பல இடங்களில் பரிக்கிரகங்கள் உருவாகின. சோழ அரசகுலத்துப் போர் வீரர்கள் பலரும் பாண்டியாரின் படைகளுக்குப் பயிற்றுனர்களாகச் சேர்ந்தனர் எனத் தெரியவருகிறது. தூத்துக்குடி மாவட்டம் கோயில்பட்டிக்கு அருகிலுள்ள நாலாட்டின்புதூர் என்ற ஊரில் என்னால் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டுக்குரிய மாறவர்மன் குலசேகரனின் கல்வெட்டு ஒன்று கண்டறியப்பட்டது. அக்கல்வெட்டில், அவ்வூர் *நெற்சுர நாட்டு ஊற்றந்தூர்* என்று குறிப்பிடப்பட்டுள்ளதோடு அவ்வூரில் பரிக்கிரகம் ஒன்று இருந்தது என்றும், அப்பரிக்கிரகத்திற்குக் கட்டுப்பட்டு *பாண்டிய மண்டலமும் கொண்டான் ராச நாராயண தேவனான நாவிலங்காதான்* என்பவன் அவ்வூரை நிர்வகித்து வந்தான் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் வட்டத்தில் சோழபுரம் என்ற ஊர் உள்ளது. அவ்வூரில் அணைந்தான் கோயில் எனப்படும் சுடலைமாட சுவாமி கோயிலின் முன்னர் பலகைக்கல் ஒன்றில் 13-ஆம் நூற்றாண்டுக்குரிய எழுத்தமைதியில் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது என்னால் கண்டறியப்பட்டது. அக்கல்வெட்டில் அவ்வூரில் மல்லன்குடியான உத்தமசோழபுரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வூரில் நகரத்தார் எனப்பட்ட வணிகர்கள் வாழ்ந்து வந்தனர் என்றும், பரிக்கிரகம் ஒன்று அவ்வூரில் இருந்ததென்றும், அப்பரிக்கிரகத்தில் அங்கக்காரர்கள் இருந்தார்கள் என்றும் அக்கல்வெட்டின் மூலம் தெரியவருகின்றன. ஜடாவர்மன் சுந்தர பாண்டியனின் பட்டப்பெயரான தேவேந்திர வல்லபன் என்ற பெயரில் அந்த அங்கக்காரர் குழு இயங்கி வந்தது. தேவேந்திர வல்லபன் அங்கக்காரர்களில் கொற்றன் குடியனான கலங்காத கண்டப் பேரையன் என்ற ஒருவன் இருந்தான். அவனுடைய மகன் குறுமன் இரட்டை என்ற பெருடையவன் சிறுவயதிலேயே எக்காரணத்தினாலோ இறந்துவிட்டான். அச்சிறுவனுக்கு சமாபதி என்ற பெயரில் சமாதிக்கோயில் ஒன்றினைக் கொற்றன் குடியன் எழுப்பினான். கருஞ்செய் அல்லது கரிசல் நிலம் ஒன்றை அவ்வூரைச் சேர்ந்த நகரத்தார் என்ற வணிகக்குழுவினரிடமிருந்து விலைக்கு வாங்கி அக்கோயிலுக்கு இறையிலியாக வழங்கினான். இச்செய்தி அக்கல்வெட்டில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இறையிலி அதாவது, அரசுக்கு வரி செலுத்தத் தேவையற்ற நிலக்கொடை என்பது அரசகுலத்தவரால் மட்டுமே வழங்கப்பட இயலும். மேற்குறித்த கல்வெட்டில் அங்கக்காரன் ஒருவன் தன் மகனுக்கு எழுப்பிய சமாதிக் கோயிலுக்கு இறையிலியாக நிலம் வழங்கியுள்ளான் என்பது சமூக அரசியல் வரலாற்று ஆய்வுக் கண்ணோட்டத்தில் குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்வு ஆகும்.

பரிக்கிரகங்கள் பற்றிய முனைப்பான ஆய்வு எதுவும் வரலாற்று அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. அத்தகைய ஆய்வு மேற்கொள்ளப்பட்டால்தான் தமிழகத்தின் அரசகுலப்படைகள் பற்றியும் அப்படைகளுக்கு வழங்கப்பட்ட போர்ப்பயிற்சி முறைகள் பற்றியும் அப்படையினரின் அதிகாரம் குறித்தும் தெரியவரும். சேர, சோழ, பாண்டிய பேரரசுகளின் ஆட்சி 14-ஆம் நூற்றாண்டுடன் முடிவடைந்துவிட்டாலும்கூட கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதிவரை தென்காசிப் பாண்டியர்கள் நெல்லைச் *சீமை*யின் சில பகுதிகளில் ஆட்சி செலுத்தி வந்தனர். தென்காசிப் பாண்டியர்கள் நெல்லைச் சீமையின் சில பகுதிகளில் ஆட்சி செலுத்தி வந்தனர். தென்காசிப் பாண்டியர்கள் வசம் வலங்கை உய்யக்கொண்டார்கள் எனப்பட்ட அரசகுலப் படை வீரர்கள் அல்லது போர்ப் பயிற்சியாளர்கள் இருந்து வந்தனர் என்பதற்குச் சில கல்வெட்டு ஆதாரங்கள் கிடைக்கின்றன. எடுத்துக்காட்டாக, கி.பி. 1660-ஆம் ஆண்டுக்குரிய அம்பாசமுத்திரத்தை அடுத்த விக்கிரமசிங்கபுரம் கல்வெட்டில் ***இவ்வூர் வலங்கை உய்யக்கொண்டார்களில் பெரும்பற்றுச் செவ்வந்தி நாடான்*** என்ற குறிப்பு காணப்படுகிறது. பரிக்கிரகம் என்பதன் தமிழ் வடிவமாகிய பெரும்பற்று இக்கல்வெட்டில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. செவ்வந்தி நாடான் என்பது சோழர்களின் பண்டைக்காலத் தலைநகராகிய உறையூர் அதாவது திருச்சிராப்பள்ளியின் இறைவன் பெயராகும். இக்கட்டுரையில்கூட ***திங்கள் முழ செவ்வந்தி நாதர் திருச்சிலாப்பள்ளி மலைதனில் ... அங்கமழுவாளது (பயிற்றி)*** என்ற செப்பேட்டு வாசகத்தைக் குறிப்பிட்டுள்ளோம். செவ்வந்திச் சோழன் அல்லது சிவந்திச் சோழன் என்ற பெயருடைய சோழன் உறையூரின் ஒரு பகுதியாகிய தர்மபுரத்தை ஆண்டுவந்தான் என்றும், அவனுக்குப் பூவேந்திய சோழன் என்ற பெயர் உண்டு என்றும் செவ்வந்தி புராணம், காளஹஸ்தி புராணம் போன்ற நூல்கள் குறிப்பிடுகின்றன. பூவேந்திய சோழன் என்ற பெயர் பூபேந்திர சோழன் என்றும், பூவேந்திர சோழன் என்றும், சோழர்களின் மெய்க்கீர்த்திகளில் இடம்பெற்றுள்ளது. ***சிவனை மறவாத சிவந்திச் சோழன்*** என்ற குறிப்பு தஞ்சை மராட்டியர் செப்பேடுகளில் இடம்பெறுகிறது. எனவே, சோழர் அரச குடும்பத்தில் செவ்வந்திச் சோழன் அல்லது சிவந்திச் சோழன் என்று பெயரிடும் மரபு வழக்கத்தில் இருந்திருப்பது தெரிகிறது. இவ்வழக்கமே கி.பி. 17-ஆம் நூற்றாண்டிலும் நெல்லைச் சீமையில் பின்பற்றப்பட்டுள்ளது.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் குறிப்பாகச் சொல்வதானால் சோழர் ஆட்சியின் வீழ்ச்சி, பாண்டியர் எழுச்சி ஆகிய நிகழ்வுகளை ஒட்டி அங்கவைஜ்ஜியர் (அங்கவைத்தியர்) மரபினர்களின் அதிகாரங்கள்

குறைக்கப்பட்டு, அரசகுல வீரர்களே அங்கக் களரியுடன் கூட அங்கவைத்திய முறைகளிலும் பயிற்சி பெறத் தொடங்கினர். சில கல்வெட்டு ஆதாரங்களின் அடிப்படையில் நாம் இம்முடிவுக்கு வரமுடியும். கோடகநல்லூர்க் கல்வெட்டில் பரசுராமன் என்ற பெயருடைய அங்கவைஜ்ஜியனுக்கு வழங்கப்பட்டிருந்த வைத்திய காணி நிலம் நெல்லையில் உருவாக்கப்பட்ட திருஞானசம்பந்தர் கோயிலுக்கு மாற்றி வழங்கப்பட்டது குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில் இருந்துதான் அங்கவெட்டுத் தொடர்பான போர்க்கலைப் பயிற்சி மட்டுமின்றி வன்மசிகிச்சை அல்லது வர்மசிகிச்சை எனப்படும் மருத்துவ சிகிச்சை முறையும் அரசகுல வீரர்களால் கற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இன்றும் நெல்லை, தூத்துக்குடி, குமரி மாவட்டங்களில் சான்றோர் சமூகத்தவரே முதன்மையான வர்மாணி ஆசான்களாகவும் மருத்துவர்களாகவும் உள்ளனர் என்பது இது தொடர்பாகக் கவனிக்கத்தக்கது.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டு வரை சவர்ணர் என்றும், மகாமாத்திர பிராம்மணர் என்றும் வழங்கப்பட்ட உயர்குடி மருத்துவர் சாதியினர் அரசகுலத்தவர்களுக்கு அரண்மனை வைத்தியர்களாகவும், பிரம்மாதிராஜன் என்ற பட்டம் பெற்ற படைத்தலைவர்களாகவும் இருந்துள்ளனர். நரசிம்மவர்மப் பல்லவனின் படைத்தலைவனாக இருந்த சிறுத்தொண்ட நாயனார் எனப்பட்ட பரஞ்சோதி இத்தகைய மகாமாத்திர பிராம்மணரே ஆவார்.[5] சோழப் பேரரசு போன்ற பேரரசுகளின் சிதைவை அடுத்து இக்குடியினருள் ஒரு பிரிவினர் காணியாளர் பிராம்மணர் என்ற பெயரிலும்,[6] மற்றொரு பிரிவினர் தமிழக நாவிதர் சமூகத்தின் ஒரு பிரிவினராகவும் அவ்வக் குறிப்பிட்ட சாதிகளில் இணைந்துவிட்டனர்.[7]

கைக்கோளர் என்று அழைக்கப்படுகின்ற ஒரு சாதியினர் தமிழகத்தில் வாழ்கின்றனர். இவர்களைச் செங்குந்தர் என்றும் குறிப்பிடுவதுண்டு. கைக்கோளர், செங்குந்தர் இரண்டும் ஒரு சாதியின் வெவ்வேறு பிரிவுகள் என்ற கருத்தும் உண்டு. குந்தம் என்பது ஈட்டி என்ற ஆயுதத்துக்கு உரிய பெயராகும். இச்சாதியைச் சேர்ந்த ஒட்டக்கூத்தர் தம் சாதியின் பெருமிதமிக்க வரலாற்றை ஈட்டி எழுபது என்ற பெயரில் பாடிப் பதிவு செய்ததாகக் கருதப்படுகிறது. கல்வெட்டுகளில் கைக்கோளப்படை குறிப்பிடப்படுகிறது. போட்டிகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்கள் தெரிஞ்ச கைக்கோளர் என அழைக்கப்பட்டனர். இராஜராஜசோழன் காலத்திலேயே இவ்வாறு வீரர்களைத் தேர்வு செய்யும் முறை இருந்துள்ளது. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட கைக்கோள வீரர்கள் அரசனின் பட்டப்பெயர் ஒன்றினால் அழைக்கப்பட்டனர்.[8]

கைக்கோளர் என்ற பெயரே கைக்கொள்ளப்பட்டவர் என்று பொருள்படும். தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியலில் ***மெய்பெறும் அவையே கைகோள வகையே*** என்ற நூற்பா (180) இடம்பெற்றுள்ளது. வடமொழியில் திருமணத்தைக் குறிப்பிடுவதற்குப் பாணிக்கிரஹணம் என்ற சொல்லைப் பயன்படுத்துவர். இச்சொல்லின் நேர்த் தமிழாக்கம் கைக்கோள் எனத் தெரிகிறது. ஒடிஸா மாநிலத்தில் அரசகுடும்பத்தினருக்குப் பெண் கொடுத்து மணவுறவு கொள்கின்ற பிராம்மண சாதிப் பிரிவினர் பாணிக்கிரஹி எனப்படுவர். அதுபோன்றே, தமிழகத்திலும் அரசகுடும்பத்துடனும், (சில பகுதிகளில் கோயிலுக்கு நேர்ந்து விடப்படுவதன் மூலம்) இறைவனுடனும் மணவுறவு கொண்ட போர்க்குடியினர் கைக்கோளர் என அழைக்கப்பட்டிருக்கலாம்.[9] இச்சாதியினர் நெசவுத் தொழிலையும் குலத்தொழிலாகச் செய்துவருகின்றனர். இராஜேந்திர சோழனின் கங்கைப் படையெடுப்பு போன்று அரசர்கள் நெடுந்தொலைவுக்குப் படையெடுத்துச் செல்ல நேர்ந்தபோது, படைவீரர்களின் உடை போன்ற தேவைகளை நிறைவு செய்யும் வகையில் போர்ப் பயிற்சியும், நெசவுத் தொழிலின் அனைத்துக் கூறுகள் (பஞ்சு, நூல், கொள்முதல் போன்றவை) பற்றிய அனுபவ அறிவும் நிறைந்த கைக்கோளப் படை வீரர்கள் படையின் அங்கமாக உடன்சென்றிருக்க வேண்டும். பேரரசுகள் நிலைகுலைந்து சிதைந்தபோது இவர்கள் முதன்மையான நெசவாளர் சாதியினராக தத்தமது இருப்பிடங்களில் நிலையாக வாழத் தொடங்கியிருக்க வேண்டும்.

கைக்கோளரை ஒத்த மற்றொரு சாதி சேனைக்குடையார் என்பதாகும். இவர்கள் *சேனை அங்காடியார்* என்று திருப்பதிக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றனர்.[10] சேனைக்குடையார் என்பதை சேனைக்குடி உடையார் என்பதன் சுருக்கமாகவோ, சேனைக்கடையார் என்பதன் திரிபாகவோ கொள்ளலாம். கைக்கோள சாதியினரின் புராணப் பெருமைகளையே இவர்களும் தமக்குரியனவாகக் கூறிக்கொண்டதால் இரு சாதியினருக்கும் விஜயநகர அரசர் அச்சுதராயர் ஆட்சிக்காலத்தில் பூசலும் வழக்கும் நேர்ந்தன எனப் புதுவை மாநிலம் வில்லியனூர்க் கல்வெட்டால் தெரியவருகிறது. கைக்கோளர் சாதியினர் போர்ப்பயிற்சி பெற்ற நெசவாளர்கள் எனில், சேனைக்குடையார் படைகள் நெடுந்தொலைவு சென்று போரிட நேரும்போது அவர்களுக்குத் தினசரி இறைச்சி கலந்த உணவை வழங்குகின்ற பொறுப்பேற்ற படைப்பிரிவினர் எனலாம். கி.பி. 6-ஆம் நூற்றாண்டு இலக்கியமாகக் கருதத்தக்க பெருங்கதையில், ***படைகட்கு நாள்நாள் தோறும் ஊனிடை அறாமை உணாத்தந்தீஉம் சேனை வாணிகம்*** என்ற

குறிப்பு இடம்பெற்றுள்ளது. இதை அடிப்படையாகக் கொண்டு சிந்தித்தால், சாலை மூலமான படையெடுப்பு எனில் வண்டிகள் மூலமும், கடற்படையெடுப்பு எனில், கப்பல்கள் மூலமும் ஆடு, கோழி, கௌதாரி போன்ற இறைச்சிக்குரிய விலங்கினங்கள், பறவைகள் ஆகியவற்றை எடுத்துச்சென்று அவற்றைக் கொன்று கறி சமைத்து உணவுடன் வழங்குகின்ற பணியே சேனை வாணிகம் எனத் தெரிகிறது.[11] ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினி ஆட்சிக்காலத்தில் புனித ஜார்ஜ் கோட்டையில் இருந்த படைப்பிரிவுக்கு இறைச்சி உணவு வழங்கவேண்டிய பொறுப்பு கொம்மிசாரியட் என்ற உணவு வழங்கு துறைக்கு இருந்தது. அத்தகைய ஒரு துறை சார்ந்த போர்க்குடியினராக மூவேந்தர் ஆட்சிக்காலத் தமிழகத்தில் செல்வாக்குடன் திகழ்ந்தவர்களே சேனைக்குடையார் சாதியினர் எனத் தெரிகிறது. பேரரசுகளின் சிதைவை அடுத்துக் கைக்கோளர்கள் நெசவை முதன்மையான வாழ்வியலாக் கொள்ளத் தொடங்கினர். கி.பி. 18-19-ஆம் நூற்றாண்டுகளில் தென்னாப்பிரிக்காவிற்குத் தோட்டத் தொழிலாளர்களை அடிமைகளாகவும், ஒப்பந்தக் கூலிகளாகவும் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்த பலர் சேனைக்குடையார் சாதியினர் ஆவர். தென்னாப்பிரிக்காவில் மகாத்மா காந்தியடிகளுக்குத் தமிழ் கற்பித்தவர் சேனைக்குடையார் சமூகத்தைச் சேர்ந்த பொறையாறு பாலகுரு செட்டியார் என்பவரே ஆவார்.

தமிழகச் சாதிகளுள் பெரும்பாலானவை வலங்கை, இடங்கை என்ற இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இவ்வாறு பிரிந்தவர்கள் சோழப் பெருவேந்தர்கள் எனத்தெரிகிறது. இவ்விரு பிரிவுகளுமே படைப்பிரிவுகள்தாம் என்பது ஓர் அடிப்படை உண்மையாகும். பிராம்மணர்களும், வேளாளர்களும் தவிர்த்த பிற கீழ்ச்சாதியினர்தாம் இவ்வாறு பிரிக்கப்பட்டிருந்தனர் என்ற ஒரு தவறான கருத்து பல வரலாற்று அறிஞர்களிடையே நிலவுகிறது. பிராம்மணர்களுள் ஒரு பிரிவினரும், வேளாளர்களும் வலங்கை, இடங்கை என்ற சாதிப்பிரிவுக்கு உட்பட்டவர்களே ஆவர். வலங்கைப் படைப்பிரிவு என்பது அறப்போர் முறையைப் பின்பற்றிய முறைப்படியான பயிற்சி பெற்ற பிரிவு என்றும், இடங்கைப் படைப்பிரிவு என்பது வெட்சிப்போர், வஞ்சிப்போர் என்ற அதர்மமான போர்முறைகளைப் பின்பற்றிய குடிபடைகளின் (போர்க்காலத்தில் போரிலும், அமைதிக்காலத்தில் தம்முடைய சாதி சார்ந்த பிற தொழில்களிலும் ஈடுபடுகின்றவர்களின்) படைப்பிரிவு என்றும் முடிவு செய்ய இயலும். இப்படைப்பிரிவுகளின் தலைமைப் பதவியை வகித்தோர் வலங்கை உய்யக்கொண்டார்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.

தமிழ்ச் சமூக அமைப்பு குறித்தும், வலங்கை இடங்கை சாதிகள் குறித்தும் போர் அவைகள் முதலான போர்ப்பயிற்சிக் கூடங்கள் குறித்தும் ஆராய்ச்சி மேற்கொள்கின்ற வரலாற்று ஆய்வாளர்களுக்கு தமிழ்க் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் ஏராளமான விவரங்கள் கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது. சிதறிக்கிடக்கும் அத்தகைய சாசனச் செய்திகளைத் திரட்டி ஆய்வு செய்தால் தமிழ்ச் சமூக வரலாற்றில் முதன்மையான சில கூறுகள் வெளிப்படும் என்பது உறுதி.

**துணைநின்ற நூல்கள்**

1. பக்.25, வரலாறு இதழ் 1, ஆகஸ்டு 1993, டாக்டர் மா இராசமாணிக்கனார் வரலாற்று ஆய்வு மையம், திருச்சி-17
2. Annual Report on Indian Epigraphy, 639/1917
3. கி.பி. 1076-ஆம் ஆண்டுக்குரிய திண்டுக்கல் மாவட்டம் நத்தம் வட்டம் சமுத்திராபட்டி வீரதாவளம் கல்வெட்டு ஆவணம் இதழ் 2, தமிழகத் தொல்லியல் கழக வெளியீடு, ஏப்ரல் 1992
4. Angamangalam- it's historical perspective, S. Ramachandran, Studies in Indian Place Names, Vol.16, Journal of the place names society of India, Mysore, 1996
5. பெரியபுராணம், சிறுத்தொண்டர் புராணம், பா. 2
6. சாதி நூல், கமலை ஞானப்பிரகாசர்
7. பக். 99-103, மங்கல சமூகத்தார் மாண்புமிகு வரலாறு, தொகுதி-1, நந்தர் நந்தினி பதிப்பகம், நாமக்கல், 2009
8. ஸ்ரீராஜராஜதேவர் படை பராந்தகத் தெரிஞ்ச கைக்கோளரும் சுந்தர சோழத் தெரிஞ்ச கைக்கோளரும் - கி.பி. 1005-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, South Indian Inscriptions, Vol. IV, No. 391.
9. காஞ்சிபுரத்திலுள்ள கி.பி. 1364-ஆம் ஆண்டுக்குரிய குமார கம்பணன் கல்வெட்டில், கோயில் தேவரடியார் பதவியும் அதனோடு இணைந்த கைக்கோளர் பதவியும், தேவரடிமையும் கைக்கோளமையும் எனக் குறிப்பிடப்படுகின்றன. S.I.I. Vol. I, No. 87
10. Thirumalai Tirupathi Devasthanam Inscriptions, vol. I, No. 100

# பத்மனாபபுரம் கோட்டை
## (கல்குளம் கோட்டை)

3

தே. கோபாலன்
தொல்லியல் அலுவலர் (ப.நி.)

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், தக்கலையிலிருந்து 2 கி.மீ. தொலைவிலும் உதயகிரிக்கோட்டைக்கு வடகிழக்கே 1 கி.மீ தொலைவிலும் 'பத்மனாபபுரம்' என்கிற வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர் அமைந்துள்ளது.

பத்மனாபபுரத்தின் பழைய பெயர் 'கல்குளம்' என்ற தற்பக் குளங்கரை ஆகும். மன்னர் மார்த்தாண்டவர்மா கி.பி. 1750-இல் நாட்டை பத்னாபசுவாமிக்கு அர்ப்பணித்து (திருப்படித்தானம்) விட்டு பத்மனாபதாசனாக மாறியபின்; வேணாட்டு அரசர்களின் தலைநகரமான கல்குளம் என்ற தற்பக்குளங்கரை 'பத்மனாபபுரமாக' பெயர் மாற்றம் அடைந்தது. பத்மனாபபுரம் அரண்மனையைச் சுற்றிலும் முதலில் மண்கோட்டைச் சுவர் எழுப்பப் பட்டிருந்தது. பின்னர் மார்த்தாண்டவர்மா காலத்தில் (கி.பி. 1729-1758) கற்கோட்டையாயிற்று.

மண்கோட்டைச்சுவர் முதலில் கி.பி. 1600-இல் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டது என்பதை அழகியபாண்டிபுரம் பெரிய வீட்டு முதலியார் ஓலை ஆவணம் ஒன்றின் மூலம் அறியலாம். இது வேணாட்டரசர் வீரரவிவர்மா (கி.பி. 1592-1609) காலத்தில் கி.பி. 1600-இல் பிறப்பித்த நீட்டு (அரசனின் ஆணை) ஆகும். இவ்வாணையின்படி கல்குளம் கோட்டை, உதயகிரிக்கோட்டை ஆகியவை கட்டுவதற்கும், இனி வருங்காலங்களில் எழுப்பப்படும் கோட்டைகளுக்கும், அவற்றைப் பராமரிப்பதற்கும் வழங்கப்பட்ட கொடை இதில் பதிவு செய்யப்பட்டுள்ளது,

இக்கொடையினை மங்கலம் முதல் மணக்குடி வரையிலுள்ள நாஞ்சில் நாட்டார்கள் (நாஞ்சில் நாட்டின் வட, தென் பிரிவிலுள்ளவர்கள்) அரசு நிலம் (பெரும்பற்று) மற்றும் கோயில் நிலங்களின் (சங்கேதம்) வருவாயிலிருந்து ஒவ்வொரு அறுவடை காலத்திலும், ஒவ்வொரு போகத்திலும் ஒரு மா நிலத்திற்கு ஒரு பணம் வீதம் கொடை வழங்கியதை இந்நீட்டு தெரிவிக்கிறது.

**நீட்டு வாசகம் :**

1. நாஞ்சி நாட்டில் வடவகை தென்வீதி உள்பட்ட பெரும்பற்று சங்கேதம் மாங்கலம் முதல் மணக்குடி வரெ
2. ஒள்ள நாட்டாரும் தேசத்தொள்ளவரும் கூட நின்று கற்குளத்து கோட்டை வெயிக்கின்றவகைக்
3. கும் உதயகிரிகோட்டை வெயிக்கின்ற வகைக்கும் அகழுவெட்டின்ற வகைக்கும் கோட்டமேயின்ற வகைக்கு
4. கம்புகால் வெட்டின்ற வகைக்கும் ஓல கொள்ளின்ற வகைக்கும் கூட எழுநூற்று எழுபத்தாறாமாண்டு
5. கார் முதலெக்கு பூவு ஒன்றுக்கு பெரும்பற்று சங்கேதம் உள்பட மாத்தால் பணம் ஒன்று ஆந்நதிரு தருகையால்
6. இந்நாள் முததெல்க்கு கல்க்குளத்து கோட்டைக்கும் உதயகிரி கோட்டைக்கும் நீக்கி இனி வையிக்கின்(ற)
7. கோட்டைகள்க்கும் கோட்டை வேலைக்கு என்று நாஞ்சி நாட்டு பெரும்பற்று சங்கேதம் உள்பட்ட தேசத்து நி(ந்)ற
8. மாவில் என்கிலும் (இருந்நகுடி) என்கிலும் கொற்று இட்டு என்கிலும் நாட்டாரேயும் அவரிடே ஆளடியாரேயும்
9. கூட கோட்டை வேலைக்கு கரை ஏற்றி ன்றதில்ல என்றும் இவ மேற்படி ஆண்டு காத்திகை மாதம்
10. இருபத்து ஒன்றாம் தியதி கா்ப்பித்தமைக்கு இச்செய்தி சொல்லி நாஞ்சி நாட்டில் வடவகை தென்வீதி உள்பட்ட
11. பெரும்பற்று சங்கேதம் உள்பட்ட தேசத்தில் நாட்டார்க்கும் காணியாளா்க்கும் நீட்டு
12. எழுதி வீடு என்று திருவுள்ளமாய்ந நீட்டு

வரிகள் 2-4 வரை பத்மனாபபுரம் கோட்டை மற்றும் உதயகிரிக் கோட்டைச் சுவர்கள் கட்டுவது தொடர்பானச் செய்தியை மலையாள மொழி நடையில் எழுதப்பட்டுள்ளதை இந்நீட்டு தெரிவிக்கிறது. இதிலிருந்து மண்ணால் சுவரெழுப்பி அது மழையில் நனைந்து கரைந்து விடாமல் இருப்பதற்காகக் கம்புகால் ஊன்றிச் சுவருக்கு மேலே ஓலைகூரை வேய்ந்ததினை அறியலாம். பத்மனாபபுரம் மண்கோட்டைச் சுவர் கி.பி. 1620-இல் கட்டி முடிக்கப்பட்டது.

இம்மண்கோட்டைச் சுவர் திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்டவர்மா காலத்தில் (கி.பி. 1729-1758) கற்கோட்டைச் சுவராக மாற்றிக் கட்டப்பட்டது. கி.பி. 1741-இல் நடைபெற்ற குளச்சல் போரில் மார்த்தாண்டவர்மாவால் பிணைக்கைதியாகப் பிடித்துவரப்பட்டவர் டச்சு வீரர் டிலெனாய் ஆவார். இவரது திறமையைக் கண்டு மார்த்தாண்டவர்மா திருவிதாங்கூர் படையிலேயே இவரை இணைத்துக் கொண்டார். பின்பு டிலெனாயின் மேற்பார்வையிலேயே மார்த்தாண்டவர்மா புதிய கோட்டைகள் கட்டவும், பழைய கோட்டைகளைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். இச்சமயத்தில்தான் பத்மனாபபுரம் மண்கோட்டைச் சுவர் கற்கோட்டைச் சுவராக மாற்றிக் கட்டப்பட்டது.

பத்மனாபபுரம் கற்கோட்டைச் சுவர் 186¼ ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக்கி சுமார் 3,500 மீட்டர் நீளத்தில் கட்டப்பட்டது. இக்கோட்டைச் சுவரின் கீழ்ப்பகுதி கிரனைட் கற்களினாலும் (Granite stone), மேல்பகுதி சீவக் கல்லினாலும் (Laterite stone) கட்டப்பட்டுள்ளது. கோட்டைச்சுவரின் கற்களை இணைக்கும் கலவையாக (bridging materials) கடுக்காய், கருப்புக்கட்டி, கத்தாழைச்சாறு, சுண்ணாம்பு ஆகிய பொருட் கூட்டினாலான கலவை பயன்படுத்தப்பட்டுள்ளது. கோட்டைச் சுவரின் தாங்குதளம் ஒரே சீராக இல்லாத காரணத்தினாலும் மேடும், பள்ளமாக இருப்பதினாலும் இக்கோட்டைச் சுவரின் உயரம் ஒரே சீராக இல்லை. அதிகபட்சமாக 24 அடி உயரத்திலும் குறைந்த பட்சமாக 15 அடி உயரத்திலும் இக்கோட்டையின் சுவர் கட்டப்பட்டுள்ளது. கோட்டைச்சுவரின் அகலம் 3 அடி ஆகும். கிரனைட் கற்களாலான சுவர்ப்பகுதி 8 அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ளது. இக்கோட்டைச் சுவரின் மேல்பகுதி சராசரியாக 3 அடி உயரத்தில் சீவக்கல்லினால் கட்டப்பட்டுள்ளது. இதன் உச்சியில் வரிசையாக இடைவெளிகள் விட்டு வளைவுகள் அமைக்கப் பட்டுள்ளன. இவ்விடைவெளிகள் வீரர்கள் துப்பாக்கியை வைத்துக் கண்காணிப்பதற்கு வசதியாக அமைக்கப்பட்டுள்ளன.

பத்மனாபபுரம் கோட்டையின் நான்கு மூலைகளிலும் நான்கு மூலைக் கொத்தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நான்கு புறமும் கீழ்புறம் தவிர மற்ற மூன்றில் பிரதான வாயில்கள் உள்ளன. இப்பிரதான வாயில்களைத் தவிர நான்கு புறமும் 4 சிறு வாயில்களும் உள்ளன. கோட்டைச்சுவரின் பாதி உயரத்திற்கு ஆங்காங்கே முட்டுச்சுவர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

பத்மனாபபுரம் கோட்டையின் உட்புறம், கோட்டைச்சுவரிலிருந்து சற்று இடைவெளிவிட்டு பிள்ளைக்கோட்டைச் சுவர் 3 அடி உயரம் 5 அடி அகலத்தில் கட்டப்பட்டுள்ளது. பிரதான கோட்டைச் சுவருக்கும் பிள்ளைக் கோட்டைச் சுவருக்குமிடையே உள்ள இடைவெளி 'ஆளோடி' என அழைக்கப்படுகிறது. இவ்விடைவெளியில் வீரர்கள் கோட்டையைச் சுற்றி காவல் பணிக்காக வலம் வரவும், தங்கள் உடைமைகளை வைத்துக் கொள்ளவும் பயன்பட்டதாகத் தெரியவருகிறது. பத்மனாபபுரம் பிரதான கோட்டைச் சுவரின் கீழிருந்து மேலே செல்ல உட்புறமாக ஆங்காங்கே கீழிருந்து மேலாக கற்படிகள் அமைக்கப்பட்டுள்ளன.

பத்மனாபபுரம் ஊரும், அரண்மனையும் கோட்டை வளாகத்திலேயே உள்ளன. மேலும் பழமையான நீலகண்டசாமி கோயிலும், இராமசாமி கோயிலும் இக்கோட்டை வளாகத்திலேயே உள்ளன. பத்மனாபபுரம் கோட்டைக்கு வடகிழக்கே மருந்துக் கோட்டையும், தென்கிழக்கே மையக்கோட்டையும் மலைகளின்மீது அமைந்துள்ளன. தற்போது இக்கோட்டைச்சுவர் பத்மனாபபுரம் நகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளது.

**துணைநின்ற நூல்கள்**

1. Travancore State Manual, Vol. I, V, Nagam Arya.
2. Kerala Society Papers, Series-6, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பக். 309-312 (Reprinted in 1997).
3. பத்மனாபபுரம் கையேடு, கேரள தொல்லியல்துறை வெளியீடு.

# 4 METALLURGY AS REVEALED BY BRIHADISVARA TEMPLE INSCRIPTIONS

**K. Sridaran**
Deputy Superintending Archaeologist (Retd.)
State Department of Archaeology

The Chola period in South Indian History is regarded as the golden epoch of medieval times. It was a period of Political stability and economic prosperity as also culmination of the achievement of artistic endeavors in South India

Rajaraja was the son of Sundara Chola alias Parantaka II by his queen Vanavan Mahadevi ascended in the Chola throne in 985 A.D.

The Chola rulers were devotees of Siva and built a number of temples. The greatest ruler of Chola dynasty was RajaRaja I, who raised the temple at Thanjavur which is known as the great temple or the Brihadisvara (great lord) in reference to Siva's greatness.

The temple is dedicated to Lord Siva which the emperor established here and names the deity Rajarajeshwaram udaiya Paramaswami. The inscriptions found in the temple record the Kings personal participation in the affairs of the temple. All the gifts to the temple were made by himself, his elder sister, his queens, the royal officers, and other donors are recorded in the inscriptions in detail.

The earliest reference in this temple occurs in the $19^{th}$ regnal year of Rajaraja I. The stupi-kudam (copper pot for the finial) was handed over to the temple authorities on the $275^{th}$ day of the 25th year of his reign and the consecration of the temple would have taken place about that time.

In his inscription (312th day of 25 regnel year) he gave one gold image of kolhai-devar abd Sribalithalam to be worshipped at time of Sribali ritual. It indicates that the worship started in this temple.

The inscriptions found in this temple contain in particular the most detailed description of the Bronzes gifted by the King and other donors incorporating such details as height, weight, metal composition, whether solid or hollow, whether seated or standing, description of the Pitha and the Prabha, number of hands and other details, a record again unique in history. They also gifted Gold, Silver vessels for religious purpose and innumerable jewellery were gifted to the idols of the temple.

The inscription dated to 319th day of his 26th regnel year he gave idol of Kshetrapala made of gold but the Pitha (Pedestal) was made of silver.

The images or idols gifted were made of Copper, Gold and Silver. the divine images are referred as ***Tirumeni*** and portraits are generally termed as ***Pratimai***.

Most of the idols were made of solid and some are hollow in nature.

"திருவடி நிலையில் எழுந்தருளி ஸ்ரீபலி எழுந்தருளுகின்றாராகக் கனமாக எழுந்தருளுவித்த பிச்சதேவர்"

Chola Mahadevi one of the queens of RajaRaja gifted Rishabhavanadevar having four divine arms, on lotus on which the image stood set with jewels, one solid image of his consort Uma Paramesvari and one Bull (Rishabha) was hollow.

"குளம்பில் நின்றும் கொம்பளவுஞ் செல்ல
ஒரு முழமே அறுவிரல் ஐஞ்சு தோரை
உசரம் உடைய கனபொள்ளலாகச் செய்த ரிஷபம் ஒன்று"

One of the officers of Rajaraja I, Aditan Suryan alias Tennavan Muvendavelan set up number if Bronzes to the temple. One sacred solid image (Tirumeni) of Chandrasekaradeva nade if brass ti be worshipped as Devaradevar for the king. (Copper+Zinc=Brass)

"பெரிய பெருமாளுக்கு
தேவார தேவராக எழுந்தருளுவித்த - கனமாக
பித்தளையால் எழுந்தருளுவித்த சந்திரசேகரர் திருமேனி ஒன்று"

One of the important officers and generals of RajaRaja I was Sri Krishnan Raman alias senapathi (general) Mummudichola Brahmarayan, who constructed the inner wall of enclosure round the big temple. He had gifted an Ardhanarisvarar image to the temple. The deity was half male- half female. The Easwara (Siva) half had two divine arms. The Uma (Isvari) half, had one divine arm and this portion was gifted with Brass. This was probably made to identify the feminine portion of the Lord Siva.

"பாதாதி கேசாந்தம் முக்காலே ஒரு விரல் உசரத்து
ஈசுவர பாகம் இரண்டு ஸ்ரீஹஸ்தமும், உமா பாகம்
ஒரு ஸ்ரீஹஸ்தமும், உமா பாகம் செம்பின்மேல்
பித்தளை கொண்டு பூசிக்கனமாக எழுந்தருளுவித்த
அர்த்தநாரீசுவரர் திருமேனி ஒன்று"

The following are the names of utensils made of Gold and gifted by Rajaraja to the Big temple. *ILAITATTU, ILAICEPPU, ICCOPPIKAI, OTTUVATTIL, KALASAM, KALASAPPANAI, KARANTIKAICEPPU, KALLAM, KALANCHI, KIDARAM, KUDAM, KURUMADAL, KENDI, CEPPUKUDAM, TATTAM, TALIKAI, TARATALVATTIL, PADIKKAM, PINKALAM, MANDAI, MADAL, MUKKU VATTAKAI, KAIVATTAKAI,* and Vattil. In Vattil the name of the king Sivapathasekaran, (சிவபாதசேகரன்)

SriRajaraja ஸ்ரீராஜராஜ were inscribed in its outer surface. He also donated Silver utensils வெள்ளி திருப்பரிகலங்கள் for the temple.

One lamp called Nilai Vilakku made of Zinc which together with an iron pin was gifted to the temple. The name of the metal is specifically mentioned here.

"உடையார் ஸ்ரீஇராஜேந்திரசோழ தேவர்க்கு - குடுத்த
துரா நிலை விளக்கு ஒன்று இருப்பஜ நாராசம் உட்பட நிறை
நூற்றிருபதின் பலம், பொதுவாக வைத்த வெண்கலமடல் ஒன்று
நாலு பலம்"

A stand for sacred ashes was also gifted to the temple. The inscription mentions that a Venkalamadal weighing four Palams and gifted to the temple. (Copper+Tin=Bellmetal)

Water pots made of Copper were presented to Chandikeswara shrine to the temple. All the four were gilted with gold.

"சண்டேசுவரர் கோயிலில் வைத்த
பொன் கடுக்கின குடம் ஒன்று"

Thus the inscriptions reveal the idols were made of metals like Gold, Silver and Copper. The small objects like lamp, ash stand were made of Zinc and Bell metal.

Making of alloy of metal was known to those people. All the evidences from the inscriptions from the Brahadisvara temple show that the skill attained in the field of Metallurgy during Chola period.

***Reference:***


1. S.R. Balasubramaniam, "Middle Chola Temples"
2. Dr. R. Nagaswamy, Master Pieces of South Indian Bronzes
3. S.I.I. vol. II, 91-115
4. Natana. Kasinathan, "Tamilar Nagarigam", Department of Archaeology, 1994

# 5 A Note on Brihadeeswarar Temple

**G. Prashanth**
Chennai

The Peruvudaiyarkoyil also known as Brihadeeswarar Temple at Thanjavur in Tamilnadu, is a Hindu temple dedicated to Shiva and built in 1010 A.D. by RajaRaja Chola in Thanjavur. It is also popularly called as the 'Big Temple', It is one of the greatest glories of Indian architecture and a reflection of the power of its patron Rajaraja Chola I.

The temple stands amidst fortified walls that were probably built during 16th century. The Vimana is 216 ft. (66m) high and a big statue of Nandi, at the entrance measuring about 16 feet long and 13 feet high. The entire temple structure is made out of hard granite stones.



The scale and grandeur of this temple is in the Chola tradition. An axial and symmetrical geometry rules the temple layout. The multificated columns with projecting square capitals signal the arrival of the new Chola style.

It is believed that the temple was the site of the major royal ceremonies such as anointing the emperor and linking him with its deity, Shiva, and the daily rituals of the deities were mirrored by those of the king.

It is evidenced from the inscriptions that found in the compound wall of this temple, the temple had always been serving as platform for the dancers who excelled in the traditional dance form of Bharatnatyam.

It is an architectural exemplar showcasing the pure from of the Dravida type of temple architecture and representative of the Chola Empire ideology and the Tamil civilisation in Southern India. The temples "testify to the brilliant acheievements of the Chola in architecture, sculpture, painting and bronze casting"

*(ஒரு மாணவியின் பார்வையில் தஞ்சைப் பெரிய கோவில் பற்றிய கட்டுரை)*

# 6 நாகராசா கோயில் கல்வெட்டுகள்

முனைவர் மா. செந்தில் செல்வக்குமரன்,
தொல்லியல் அலுவலர் (ப.நி.)

கல்வெட்டுகள் வரலாற்றை அறிய உதவும் தொல்லியல் சான்றுகளில் ஒன்றாகும். அவை சமுதாய வரலாற்றையும், அரசியல் வரலாற்றையும் எழுதிட ஆணித்தரமானச் சான்றுகளைத் தருகின்றன. ஒரு கோயிலில் உள்ள கல்வெட்டுகளின் மூலம் அக்கோயிலின் காலப்பழமையையும் அக்கோயிலுக்கு வழங்கப்பட்ட பல்வேறு தானங்களையும், காலந்தோறும் அங்கு நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளையும் திருப்பணிகளையும் அறிந்து கொள்ளலாம்.

கன்னியாகுமரி மாவட்டம் நாகராசா கோயிலில் 12 தமிழ்க் கல்வெட்டுகள் உள்ளன. அவற்றுள் பழமையானது கி.பி. 1505-ஆம் ஆண்டைச் சார்ந்தது. இக்கல்வெட்டுகள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டிலிருந்தே நாகர்கோயிலில் நாகர் வழிபாடு சிறப்புடன் விளங்கியதற்குச் சான்றாகின்றன.

மேலும் இக்கோயிலில் பெருங்கல்வெட்டுகள் அனைத்தும் கோயில் முன்பு நடப்பட்டுள்ள நீள்சதுரக் கற்களில் வெட்டிவைக்கப்பட்டுள்ளன. இதனைக் கொண்டு 'நாகர் கோயில்' வெகுகாலம் வரை கற்கள் கொண்டு அமைக்கப்படவில்லை என்பதை உறுதிசெய்கின்றன.

**சமணத்துறவியர்**

இங்குள்ள 7 கல்வெட்டுகள் கமலவாகன பண்டிதர், குணவீர பண்டிதர் ஆகிய இரு சமண முனிவர்கள், நாகர்க்கும், நாகராசாவுக்கும் வழங்கிய தானத்தைக் குறிப்பிடுகின்றன. இவ்விருவரும் நாகர்கோயிலிலேயே பள்ளி உடையவர்கள். இக்கோயில் வளர, வளமடைய வழிபாடுகள் பெருகக் காரணமானவர்கள். இவர்கள் நாஞ்சில் நாட்டிலும், நெல்லை மாவட்டத்தில் உள்ள சேரன் மகாதேவி, தருவை ஆகிய ஊர்களில் இக்கோயிலுக்காக நிலதானம் வழங்கியுள்ளனர்.

**நாகர் வழிபாடு**

இக்கோயிற் கல்வெட்டுகள் கருவறை தெய்வங்களை 'நாகர்' 'நாகராசா' எனக் குறிப்பிடுகின்றன. கி.பி. 1584-ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்று 'நாகர்

திருவனந்தாழ்வார்' எனக் கூறுகிறது. கி.பி. 1643-இல் வெட்டப்பட்ட துண்டுக் கல்வெட்டு கிருட்டிணன் கோவில் எனத் தொடங்குகிறது. ஆனால் கி.பி. 1645-இல் வெட்டப்பட்ட கல்வெட்டு மறுபடியும் இறைவனை நாகர் என்றே குறிப்பிடுகிறது. எனவே இக்கோயிலில் மூலதெய்வம் நாகர் என்பதில் ஐயமில்லை. மேலும் வாயிலில் துவாரபாலகர் சிலைகளுக்குப் பதிலாக நாகர் சிலைகள் இடம் பெற்றிருப்பதும், இது நாகர் வழிபாட்டுத் தலம் என்பதை உறுதிசெய்யும். செப்புத் திருமேனிகள் பெரும்பாலானவை தலைக்குமேல் நாக படத்துடன் வடிக்கப்பட்டுள்ளன.

**பள்ளிச் சந்தம்**

பொதுவாகக் கல்வெட்டுகளில் பெருமாள் கோயிலுக்குத் தானமாக வழங்கப்பட்ட நிலத்தைத் 'திருவிடையாட்டம்' எனவும், சிவன் கோயிலுக்கு வழங்கப்பட்ட நிலத்தை 'தேவதானம்' எனவும், சமண மற்றும் பௌத்த கோயில்களுக்கு வழங்கப்பட்ட நிலத்தைப் 'பள்ளிச்சந்தம்' என்றும் குறிப்பிடுகின்றன. நாகராசா கோயிலுக்கப் பள்ளிச்சந்தமாக நிலம் விடப்பட்டதாக பல கல்வெட்டுகள் கூறுகின்றன. எனவே இக்கோயில் வெகுகாலம்வரை சமணப்பள்ளியாகத் திகழ்ந்தது எனக் கூறலாம். இங்குள்ள தூண்களில் காணப்படும் மகாவீரர் சிற்பங்களும் அதனை உறுதி செய்கின்றன.

**மன்னனின் பெயரில் பூசை**

பூதலவீர உதைய மார்த்தாண்டன் என்கிற திருவிதாங்கூர் மன்னர் இக்கோயில் இறைவனுக்குத் தானம் வழங்கியுள்ளார். இம்மன்னர் இத்தலம் வந்து இவ்விறைவன் அருளால் தன் உடல்நோய் நீங்கப் பெற்றார் என்பது வழக்கு. ஆதலால் இவ்விறைவன் மீது ஆழ்ந்த பக்தி கொண்டான். அம்மன்னன் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் களக்காட்டைத் தலைநகராகக் கொண்டு தமிழகத்தின் தென்பகுதியை ஆண்ட மன்னன். ஆதலால் மக்கள் அவனை அன்புடன் 'களக்காட்டு மகாராஜா' என்று அழைத்தனர். இவனுக்கு வீரமார்த்தாண்டன் என்ற ஒரு சிறப்புப் பெயரும் உண்டு. கி.பி. 1520-இல் நாகர்க்கு, தன் பெயரில் வீரமார்த்தாண்டன் சந்தி உச்சி பூசை என்ற வழிபாடு நடைபெற நிலம் ஒன்றினைக் கோட்டாற்றில் வழங்கி உள்ளான். 'களக்காடான சோழ குல வல்லிபுரத்து வீரமார்த்தாண்டச் சதுர்வேதி மங்கலம் என்று நம்பேரால் வைத்த அகரச் சீமையில் புதிய வீட்டில் நாம் வீடாய் இருந்து கற்பித்தமைக்கு' என களக்காட்டு அரண்மனையிலிருந்து இத்தானம் வழங்க, இவ்வாணை பிறப்பித்ததாகக் கூறுகிறான்.

**கி.பி. 1643-இல் திருப்பணி**

கி.பி. 1643-இல் குலசேகரப் பெருமாள் கொன்றை மாலை என்பவன் இக்கோயிலில் பல திருப்பணிகள் செய்துள்ளான். ஆனந்தகிருட்டிணன் கோயில் முன்புள்ள தூண் மண்டபத்தூண் ஒன்றில் இவனது உருவச்சிலை உள்ளது. ஆகவே இம்மண்டபத்தை இவன் அமைத்திருக்க வேண்டும்.

**மகரதோரண விளக்கு**

கி.பி.1645-இல் மாருவநம்பி தம்பிரான்குட்டி, சடையன் ஆகிய இருவரும் பலரிடமும் பணம் பிரித்து நாகர்க்கு மகர தோரண விளக்கு செய்து வைக்கின்றனர். மேலும் தினசரி அவ்விளக்கு எரிப்பதற்கு இருநாழி எண்ணை வழங்க 600 பணம் கோயில் பண்டாரத்தில் வழங்குகின்றனர். இம்மகரவிளக்கு மகரதோரணத்தை உச்சியில் கொண்டு 67 சிறு விளக்குகளுடன் இன்றும் நாகர் சன்னதி முன்பு அமைந்துள்ளது.

**ஞாயிற்றுக்கிழமைச் சிறப்பு வழிபாடு**

இக்கோயிலில் மற்ற நாட்களை விட ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பெறுகின்றன. பக்தர்களின் கூட்டமும் அதிகமாக இருக்கும். நாகர் வழிபாட்டிற்கு ஞாயிறு சிறந்த நாளாகக் கருதப்படுகிறது. கல்வெட்டுகளும் ஞாயிற்றுக்கிழமைகளில் இறைவனுக்குப் படைக்கப்படும் அமுதுபடியின் அளவு இரட்டிப்பாக இருக்கவேண்டும் எனக்கூறி அதற்காகத் தானங்கள் வழங்கப்பட்டதைக் கூறுகின்றன.

> 'நாயறாட்சை தோறும் படி யிரட்டயாகவும் பூசை நடக்கக் கற்பித்த
> வகைக்கு பள்ளிச்சந்தமாக விட்டுக் குடுத்த நிலமாவது'

என கி.பி. 1514-ஆம் ஆண்டு கல்வெட்டுக் குறிப்பிடுவதைக் காணலாம்.

தை மாத, ஞாயிற்றுக்கிழமைகளில் வழிபாடுகள் மிகச் சிறப்பாக கொண்டாடப்படவேண்டும் என கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது. கி.பி. 1505-இல் கமலவாகன பண்டிதர், குணவீர பண்டிதன் ஆகிய இரு சமண முனிவர்களும் தை மாத பூசைகள் நடைபெற நாஞ்சில் நாட்டு முனையனூர் பற்றில் 20 மா நிலம் தானமாக வழங்கியுள்ளனர். தை மாதத்தில் ஞாயிறு ஒன்றுக்கு 100 படி அமுது இறைவனுக்கு படைக்க வேண்டும் எனக் கூறுகிறது. இன்றைக்கும் இக்கோயிலில் தை மாத ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்பு வழிபாடுகள் பாம்பு மேய்க்காட்டு தந்திரிகளால் நடத்தப்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

**பாயாச அமுது**

பொதுவாக இறைவனுக்கு புளியோதரை, சர்க்கரைப் பொங்கல், வெண்பொங்கல் ஆகியவற்றைத் திரு அமுதாகப் படைப்பது வழக்கம். ஆனால் இக்கோயிலில் பாயாசம் திருஅமுதாக விரும்பிப் படைக்கப்படுகிறது.

'கால சந்தி பாயாசத்துக் கமுதுபடி நானாழி'

எனக் கி.பி. 1505 ஆம் ஆண்டுக் கல்வெட்டு பாயாசம் அமுதுபடியாகப் படைக்கப் பட்டதைத் தெரிவிக்கிறது.

**நொந்தா விளக்கு**

கி.பி. 1520-இல் கமலவாகன பண்டிதர், குணவீரபண்டிதன் ஆகிய இரு சமண முனிவர்களால் இரண்டு நொந்தா விளக்கு (அணையா விளக்கு, வாடா விளக்கு) செய்தளிக்கப்பட்டன. அவை எரிவதற்கு எண்ணை வழங்குவதற்காக 2 மா நிலம் தானமாக வழங்கியுள்ளனர். அவ்விரு பெருவிளக்குகளும் தலையில் 5 தலை நாகத்தோடு இன்றும் இக்கோயிலில் காட்சி தருகின்றன. அவற்றில் ஒன்று இன்றும் வாடா விளக்காக நாகர் சன்னதி முன்பு எரிந்து வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு நாகர்கோயிலைப் பற்றிய செய்திகளை இங்குள்ள கல்வெட்டுகளிலிருந்து நாம் அறிந்து மகிழலாம்.

# 7

# கஞ்சமலை சித்தேஸ்வரர் திருக்கோயில்

**ச. செல்வராஜ்**
உதவி இயக்குநர் (ப.நி.)

சேலம் மாவட்டம், சேலம் வட்டம், சேலத்திலிருந்து மேற்கே சுமார் 15 கி.மீ. தொலைவில் எளம்பிள்ளை செல்லும் வழியில் கஞ்சமலையின் அடிவாரத்தில் சித்தேஸ்வரசுவாமி திருக்கோயில் அமைந்துள்ளது. திருமூலர், திருமந்திரம், சிறுபாணாற்றுப்படை, கொங்கு மண்டல சதகம் மற்றும் கரபுர நாதன் புராணம் போன்ற அரிய நூல்களில் இப்பகுதியைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

கஞ்சமலை என்பது கொங்கு நாட்டிற்கு பெருமை சேர்க்கும் கொல்லிமலை, கஞ்சமலை ஆகிய இரண்டிற்கும் இடையே அடர்ந்த காடுகளடங்கிய மலைப்பகுதியாகும். இங்கு கனிம வளம், அரிய மூலிகைகள் காணப்படுகின்றன. இங்கு இரும்பின் மூலப்பொருள் காணப்படுவதால் இங்கு விளையும் மூலிகைகள் தனிச்சிறப்பையும், உயர்ந்த மருத்துவ குணத்தையும் கொண்டுள்ளன.

## சித்தர்கள்

சித்தர்கள் துறவு வாழ்க்கையை மேற்கொண்டு காடுகளிலும் மலைகளிலும் வாழ்ந்து வருபவர்கள். இவர்கள் காடுகளிலும் மலைகளிலும் சுற்றித்திரியும் சமயத்தில்தான் கண்ணில்படும் அரிய மூலிகைகளை சேகரித்து, அதன் மருத்துவ குணத்தைக் கண்டறிந்து, மக்களுக்கு அம்மூலிகைகளைத் தந்து அவர்களுக்கு உதவி புரிந்துள்ளனர். இவ்வரிய மருந்துகளை பச்சிலைகளைச் சாறாக்கி உடல் பிணிகளைப் போக்கினர். இவ்வாறு பல சித்தர்கள் தமிழகத்தில் இருந்துள்ளனர். குறிப்பாக தமிழகத்தில் 'பதினெண் சித்தர்கள்' பற்றிய குறிப்புகள் நிறையக் கிடைக்கின்றன.

## பதினெண் சித்தர்கள்

பதினெட்டு சித்தர்களைக் கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்துவர்

| | | |
|---|---|---|
| 1. அகத்தியர் | 7. தன்வந்திரி | 13. கொங்கணர் |
| 2. சிவவாக்கியர் | 8. குதம்பைச்சித்தர் | 14. சுந்தரானந்தர் |
| 3. திருமூலர் | 9. கருவூரார் | 15. மச்சமுனி |
| 4. காளங்கி | 10. இடைக்காடர் | 16. கமலமுனி |
| 5. போகர் | 11. வான்மீகர் | 17. சட்டைநாதர் |
| 6. ராமதேவர் | 12. பாம்பாட்டிச்சித்தர் | 18. பதஞ்சலி |

இவ்வாறு பதினெட்டுச் சித்தர்களைக் குறிப்பிடுவார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்டச் சிறப்புத் தன்மையுண்டு. அகஸ்தியர், சிவவாக்கியர், திருமூலர், காளங்கி, போகர், தன்வந்திரி, குதம்பைச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர் போன்ற சித்தர்களின் வாக்கிய பேதங்கள், சோதிடம், மருத்துவம் பற்றிய சுவடிகள் ஆங்காங்கே கிடைக்கப்பெற்றன. அவை நூலாக வெளியிடப்பட்டுள்ளன. போகரின் மருத்துவக் குறிப்புகள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை ஆகும். மூலிகைகள் அனைத்தும் சோதித்து பின்னரே மக்களுக்கு வழங்கி வந்துள்ளனர். இன்றளவிலும் கிராமங்களில் இது நாட்டு வைத்தியம் என்ற பெயரில் தனிச்சிறப்புப் பெற்றுத் திகழ்கின்றது. இதற்கு எந்தவிதமான பக்க, எதிர் விளைவுகள் இல்லை என்பது இதன் தனித்தன்மையாகும். அத்தகு மூலிகைகள் அடங்கிய பகுதிதான் 'கஞ்சமலை'. இம்மலையை சித்தமருத்துவக் கழகம் இன்றைக்கும் ஆய்விற்குப் பயன்படுத்தி பல மூலிகைகளைக் கண்டறிந்து வருகின்றனர்.

சித்தர்கள் ஒவ்வொருவரும் தனக்கென சீடர்களை உருவாக்கி இந்த மருத்துவத்தையும், தான் அறிந்தவற்றையும் போதித்து வந்துள்ளனர். இதனை கீழ்காணும் திருமூலர் பாடல் வரிகளால் அறியலாம்.

*"மந்திரம் பெற்ற வழிமுறை மாலங்கன்*
*இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்*
*கந்துருக் காலாங்கி கஞ்சமலையனோடு*
*இந்த எழுவரும் என்வழியாமே"* (132-திருமந்திரம்)

**கஞ்சமலையும் சித்தேஸ்வரர் திருக்கோயிலும்**

கஞ்சமலையின் அடிவாரத்தில் அமைந்த ஊருக்கு பொன்னகர் என்றும் தென்புறம் ஓடும் நதிக்கு பொன்னி நதி என்றும் பெயர். இத்தகு சூழலில் கோயில்

ஒன்று அமைந்துள்ளது. இதனருகிலுள்ள பொய்கைக்கு 'கந்த தீர்த்தம்' என்று பெயர். கரும்பொன்னான இரும்புக் கனிமங்கள் நிறைந்த பகுதி. இம்மலையில் உலோகங்களின் மூலப்பொருட்கள் நிறைந்திருப்பது போன்று இரசவாதத்துக்கான மூலிகைகளும் நிறைந்திருக்கின்றன. இதனை கொங்கு மண்டல சதகத்தின் குறிப்பில் இருந்து பார்க்கலாம்.

*"கஞ்சமலைச் சித்தர் வாழ்வுமிரதங் கரணிவளர்*

*மஞ்சு திகழ் கஞ்சமா மலையுங் கொங்கு மண்டலமே"* என்பர்.

இங்கெழுந்தருளியுள்ள இறைவன் பெயர் சித்தேஸ்வரர். மூலவர் யோக நிலையில் உள்ளார். இக்கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோயில் முன் மண்டபம் திறந்தவெளியில் அமைந்துள்ளது. இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்ற அமைப்புகளைக் கொண்டுள்ளது.

கஞ்சமலை சித்தரை 'கருங்காட்டுச்சித்தர்' எனவும் கூறுவர். இவர் தம் குருவான திருமூலரை 'காலங்கி', 'கமலமுனி', 'கஞ்சமலையான்' என்று குறிப்பிடுகிறார். கஞ்சமலைச் சித்தரின் சீடர்கள் அகோரர், மாளிகைத்தேவர், நாதாந்தர், பரமானந்தர், போகர் ஆகியோர் ஆவர். போகரின் மாணவர் புலிப்பாணிச் சித்தர் என்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதியமான் ஔவைக்கீந்த அருமையான கருநெல்லிக்கனியைக் கொடுத்தக் கருங்காடு இந்த கஞ்சமலைக்காடு என்பர். *"போரடு திருவிற் பொலந்தார் அஞ்சி மால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி நீலமணி மிடற்றொருவன் போல மன்னுக பெரும நீயே"* என கனி தந்த அதிகனை வாழ்த்திய ஔவை, புறநானூற்றுப் பாடலில் கனி கொடுத்த இக்கஞ்சமலை யையும் அந்த நெல்லிமரத்தையும் பற்றிக் கூறும்பொழுது

*"தொன்னிலை பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட*

*சிறியிலை நெல்லித் தீங்கனி"*

எனக் குறிப்பிடுகின்றார். இங்கு அவர் குறிப்பிடும் 'பெருமலை' என்பது ஏறக்குறைய 9 கி.மீ. தூரம் நீண்டு காணப்படும் இக்கஞ்சமலையே ஆகும். சிறுபாணாற்றுப் படையிலும் இம்மலையைப் பற்றியக் குறிப்பு காணப்படுகின்றது.

**கந்த தீர்த்தம்**

இங்கு ஒன்பது கிணறுகள் இருந்ததாக கூறுகின்றனர். ஆனால் தற்பொழுது 6 கிணறுகள் மட்டுமே உள. அமாவாசைத் தீர்த்தம், உப்புகுளம், காந்த தீர்த்தம் போன்ற பல பெயர்களில் அக்கிணறுகளை அழைத்து வருகின்றனர். இந்த தீர்த்தங்களில் நீராடினால் தங்கள் நோய்கள் தீருவதாக மக்கள் நீராடி பயன்பெற்றுச் செல்கின்றனர். மூலிகைகள் கலந்த நீராக அமைவதாலும், இரும்பு சக்தியானது காந்த சக்தியாக மாறிவருவதாலும் இப்பயன் பெறுகின்றனர் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். அம்மூலிகை களின் வழியே பல நோய்கள் குணமடைந்தாலும் குறிப்பாக தோல் நோய்கள் குணமடைவதாகக் கூறுவர்.

இக்கோயிலைச் சுற்றிலும் பல சமுதாயத்தினரின் சத்திரங்கள் உள்ளன. இச்சத்திரங்கள் இங்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானம் செய்வதும், தங்குவதற்கு வசதி செய்து கொடுக்கவும் அமைக்கப்பட்டதாகும்.

இப்பகுதி சித்தர்கள் வாழ்ந்த இடம் மற்றும் நமது தொன்மையான இயற்கை வைத்திய முறைகளை வெளி உலகிற்கு வெளிக்கொணர்ந்த இடமாகும். எனவே பல்லாயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன் நமக்கு சித்தர்கள் விட்டுச் சென்ற அரிய பல மருத்துவச் செல்வங்களைப் பேணிக்காப்போம் என்பதில் உறுதியாக இருத்தல் வேண்டும். சித்தர்கள், முனிவர்கள் பெரும்பாலும் ஊரின் எல்லைப்பகுதியிலும் மலையடிவாரத்திலும் குடியிருப்பர். அவ்வாறு கஞ்சமலையை சித்தர்கள் தேர்வு செய்து தங்கியுள்ளனர். தற்பொழுது அது கோயிலாக உருவெடுத்து சித்தேஸ்வரர் திருக்கோயிலாக அமைந்துள்ளது. இங்கு காணப்படும் கட்டடங்கள் காலத்தால் பிற்பட்டவை. ஆனால் வரலாற்று அடிப்படையில் மிகவும் பழமைவாய்ந்த இடம் எனலாம்.

# குழந்தை வேலப்பர் திருக்கோயில் – பூம்பாறை

8

கோ. முத்துசாமி

மண்டல பதிவு அலுவலர், திருச்சி

**அமைவிடம்**

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், கொடைக்கானலில் இருந்து 25 கி.மீ. தூரத்தில் மலைகள் காடுகள் சூழ்ந்த பகுதியின் நடுவே அமைந்த – தாழ்வான பகுதியில், பசுமையான நிலப்பரப்பில் குடியிருப்புகள் உள்ள பகுதியாக பூம்பாறை எனும் தலம் அமைந்துள்ளது.

**பெயர்க் காரணம்**

நான்கு பக்கங்களும் பசுமையான அடர்ந்த காடுகளுடன் கூடிய மலைகளுடன் பூம்பாறை எழிலான தோற்றத்துடன் காணப்படுகிறது. தொன்மைக் காலத்தில் மலைகளின் பாறைகள் உடைந்து நொறுங்கி, மூலிகை மரங்களின் இலைகளுடன் சேர்ந்து, சமவெளியாக அமைந்துவிட்டது. மனித குடியிருப்புகளுக்கும், விவசாயத்திற்கும் ஏற்றபடி இவ்வூர் செழிப்புடன் காணப்படுகிறது. எனவே "பூம்பாறை" என்று ஊருக்குப் பெயர் வழங்கி வருகிறது. இவ்வூரின் நடுவே அருள்மிகு குழந்தை வேலப்பர் திருக்கோயில் அமைந்துள்ளது. கோயிலின் உட்பிரகாரத்தில் 1) விநாயகர் 2) சிவன் 3) நவக்கிரகம் 4) பத்ரகாளி 5) பைரவர் 6) அருணகிரிநாதர் – தனி சன்னதிகள் உள்ளன. குடமுழுக்கு செய்வதற்கு திருப்பணிகள் நடந்து வருகின்றன. இக்கோயில் இந்துசமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

**மூலவர் – குழந்தை வேலப்பர் சிறப்பு**

மூலவர் வேலப்பர் செவ்வக பீடத்தின் மீது தண்டு (கோல்) வலது கையில் ஊன்றிப் பிடித்தபடி நின்று அருள்பாலிக்கிறார். தலையின் பின்புறம் குடுமி உள்ளது. வலது காதில் மகர குண்டலமும், இடது காதில் பத்ர குண்டலமும் அணிந்துள்ளார். நெற்றியிலும், மார்பிலும் உருத்திராக்க மாலை சூடியுள்ளார்.

மார்பில் முப்புரி நூல் அணிந்துள்ளார். இடது கையினை இடது தொடைமீது வைத்துள்ளார். இடுப்பின் ஆடை கணுக்கால் வரை செல்கிறது. திடகாத்திரமான சிறுவன் உருவம் போல் நின்ற நிலையில் அருட்காட்சி வழங்குகிறார். அருணகிரிநாதரால் பாடல் பெற்றது. தலவிருட்சம் - மகிழ மரம்.

**தசபாஷாணம் - சிலை அமைப்பு**

தமிழ்நாட்டில், பதினெண் சித்தர்களுள் ஒருவரான போகர் என்பவர் பழனி அடிவாரத்தில் அமைந்துள்ள திருவைகாவூரில் வாழ்ந்தவர் ஆவார். இவருடைய மாணவர் புலிப்பாணி. போகர் வான்வழி மூலமாக முற்காலத்தில், சீனா போன்ற வெளிநாடுகட்கும் சென்று வந்துள்ளார். இவரால் உருவாக்கப்பட்டதுதான் பழனியில் மலைமீது கோயில் கொண்டுள்ள அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி ஆகும். அது போகரால், ஒன்பது வகை அரிய இயற்கை மூலிகைக் கலவையைக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும்.

ஆனால், இங்கு பூம்பாறையில் போகர் ஒரு மூலிகை அதிகம் சேர்த்து. (9+1=10) "தசபாஷாணம்" என்ற கலவையைக் கொண்டு குழந்தை வேலப்பரின் உருவத்தை வடிவமைத்துத் தந்துள்ளார். பாஷாணம் - மூலிகை கலவை என்று பொருள். இவரின் காலம் (கி.பி. 1550-1625) 16-ஆம் நூற்றாண்டு, நாயக்க மன்னர்களின் காலமாகும்.

**பழனி - பூம்பாறை- கோயில் கட்டட அமைப்பு**

போகர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் ஸ்ரீமுருகனின் திருமேனிகளை வடிவமைத்து, பக்தர்களின் வழிபாட்டுக்காக, உரிய இடங்களைத் தேர்ந்தெடுத்து நிறுவியுள்ளார். அவர் காலத்தில் ஒரு சிறிய மண்டபம் அமைத்து இருப்பார். அது செங்கல் திருப்பணியாகத்தான் இருந்திருக்கும்.

எனவே, கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் நாயக்க மன்னர்களின் ஆட்சிக் காலத்தில், கோயில் மூலவர் விமானம் உட்பட கருங்கல் கட்டடமாகக் கட்டி விரிவாக்கம் செய்துள்ளனர். மூலவரின் சன்னதியின் வெளிச்சுவரில் செதுக்கப்பட்டுள்ள, புடைப்புச் சிற்பங்கள் இரண்டு இடங்களிலும் ஒரே அமைப்பில் காட்சி தருவதால், பழனியிலும் பூம்பாறையிலும் ஒரே காலத்தில் கட்டப்பட்டுள்ளது புலப்படுகிறது.

போகர் மூன்றாவதாக மேலும் ஒரு ஸ்ரீபாலமுருகனையும் இதே பாணியில் வடிவமைத்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. மேலும் ஆய்வில் அது நமக்கு புலனாகும் என்று நம்பலாம்.

**தகவல்**

1. போகரின் பயணக்குறிப்புகள், அமரர் அ. இராசேந்திரன், எம்.ஏ., மேனாள் கல்வெட்டாய்வாளர், தொல்லியல் துறை, - தமிழாய்வுக்கழகம் வெளியீடு, செந்தாரப்பட்டி, சேலம் மாவட்டம், முதற்பதிப்பு-மே-1980.
2. கட்டுரை ஆசிரியர் நேரடி கள ஆய்வின்போது பூம்பாறை சென்று திரட்டிய செய்திகள் இங்கு தரப்பட்டுள்ளது.




28-12-2012 அன்று கங்கைகொண்ட சோழபுரம் அகழ்வைப்பகத்தில் முதலாம் இராசேந்திர சோழன் கண்காட்சியினை தொல்லியல் துறை ஆணையர்(பொறுப்பு) முனைவர் சீ. வசந்தி, எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி அவர்கள் திறந்து வைக்கின்றார்.





எந்திரக்கட்டடங்களுடன், கிரந்த அட்சரங்களால்
காயத்திரி மந்திரங்கள் பொறிக்கப்பட்டுள்ள
ஆடவல்லான் செப்புத் திருமேனியின் அடிப்பகுதி தாமரைப்பீடம்



கிரந்த எழுத்துப் பொறிப்புள்ள ஆடல்வல்லான்
செப்புத்திருமேனியின் பின்புறத் தோற்றம்,
அருள்மிகு காசி விசுவநாதர் ஆலயம், துறையூர்